*4*

# பாடு அனுபவிக்கும் தேவ பிள்ளைகள் என்ற வகையில் நடந்து கொள்ளுதல் (பாகம் 1)

## (2:11-25)

*பழைய ஏற்பாட்டில் அதிகமான பகுதிக்கு ஒரு மக்களினத்துவக் காட்சியமைப்பைக் கொடுத்த நிலையிலும், இஸ்ரவேலுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நாட்டின் முக்கியத்துவத்தைக் காண்பித்த நிலையிலும், 1 பேதுரு நிருபத்தில் சொந்த நாட்டைக் கண்டறிதலின் நம்பிக்கையின்மையை வெளிப்படுத்தும் உணர்வுகளைக் கண்டறிதல் சிலவகையில் திகைப்புக்கு உரியதாக உள்ளது. ஆபிரகாம் கானான் நாட்டில் பரதேசியாகச் சஞ்சரித்தார். கிறிஸ்தவர்கள் இந்த உலகத்தினூடே கடந்து மாத்திரம் செல்கின்றனர். பேதுருவின் வாசகர்கள் இந்த பூமியின்மீது தற்காலிகக் குடிகளாக இருக்கின்றனர் என்றும் அவர்கள் பூமி என்ற இந்த கோளைக் கடந்து செல்லும் விருந்தினர்களாக இருக்கின்றனர் என்றும் பேதுரு குறிப்பிட்டார்.*

### *"அந்நியர்களும் பரதேசிகளும்" (2:11, 12)*

***[11]பிரியமானவர்களே, அந்நியர்களும் பரதேசிகளுமாயிருக்கிற நீங்கள் ஆத்துமாவுக்கு விரோதமாய்ப் போர்செய்கிற மாம்சஇச்சைகளை விட்டு விலகி, [12]புறஜாதிகள் உங்களை அக்கிரமக்காரரென்று விரோதமாய்ப் பேசும் விஷயத்தில், அவர்கள் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, அவற்றினிமித்தம் சந்திப்பின் நாளிலே தேவனை மகிமைப்படுத்தும்படி நீங்கள் அவர்களுக்குள்ளே நல்நடக்கையுள்ளவர்களாய் நடந்துகொள்ளுங்கள் என்று உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன்.***

**வசனம் 11.** இந்த இடத்தில் இந்நிருபத்தின் போக்கு மாறுகிறது. கிறிஸ்தவராக இருத்தல் என்பது அர்த்தப்படுத்துவது என்ன என்பதைப் புரிந்து கொள்வதில் வாசகர்களுக்கு உதவிய நிலையில் பேதுரு, இந்த நிருபத்தின் கடைசிப் பகுதி வரையிலும் எடுத்துச் செல்லப்படும் நடைமுறை வாழ்விற்கான புத்திமதிகளை அளிக்க இங்கிருந்து தொடங்கினார். **உங்களுக்குப் புத்திசொல் லுகிறேன்** என்று அவர் கூறினார். கிரேக்க - ரோமக் கலாச்சாரத்திற்குள்ளாக, ஒழுக்கவீனம் அதிலும் குறிப்பாக பாலுறவுரீதியான ஒழுக்கவீனம் எந்த அளவுக்கு சிக்கலாக்கியிருந்தது என்பது தரப்பட்ட நிலையில், கிறிஸ்துவின் வசனம் வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறபடி, பாவத்தை முற்றிலுமாகத்

துடைத்துப் போடுதலைச் செய்யக் கிறிஸ்தவர்கள் போராடினார் (4:1, 2). மாம்ச இச்சைகள் சுலபமாக விட்டுவிடப்படுபவையாக இருக்கவில்லை. அவர்களின் குடியிருப்பு இந்த உலகத்தில் இல்லை என்பதை அவர்களுக்குப் பேதுரு மறுபடியும் நினைவூட்டினார். மனித விஷயங்களின் வெளிப்புறங்களில் அவர்ககள் நின்று, உலகத்தையும் அதன் வழிகளையும் சார்ந்திராதவர்களாக இருந்த அவர்களின் முன்னணி நிலையை அவர்கள் உணர்ந்து அறிய வேண்டும் என்று அவர் விரும்பினார். அவர்கள் தாங்கள் வாழ்ந்த நாட்டினூடே கடந்து செல்கிற **அந்நியர்களும் பரதேசிகளுமாக** இருந்தனர். அப்படிப்பட்ட நிலையில் அவர்கள் இந்த உலகத்தைச் சார்ந்தவர்களாக இருந்தவர்களால் துன்புறுத்தப்பட வாய்ப்பு இருந்தது. உலகம் அவர்களை வெறுக்கலாம், ஆனால் தேவன், பேதுரு மற்றும் அவர்களின் சகோதர சகோதரிகளுக்கு, அவர்கள் **பிரியமானவர்களாக இருந்தனர்.**

கிறிஸ்தவர்கள் "தேர்ந்துகொள்ளப்பட்டவர்களாக" உள்ளனர், அவர்கள் "பிரியமானவர்களாக" உள்ளனர், ஆனால் அவர்கள் "அந்நியர்களும் பரதேசிகளுமா" கவும் உள்ளனர். பரலோகமே அவர்களின் தாய்நாடாக உள்ளது. 1:2ல் பேதுரு தமது வாசகர்களை "பரதேசிகள்" என்று அழைத்திருந்தார், ஆனால் NASB வேதாகமம் இந்த வசனத்தில் *parepidēmos* என்ற அதே கிரேக்கச் சொல்லை "அந்நியர்கள்" என்று மொழிபெயர்க்கிறது. "பரதேசிகள்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள இதே போன்ற ஒரு வார்த்தை 1:17ல் "இங்கே பரதேசிகளாய்ச் சஞ்சரிக்குமளவும்" என்ற இடத்தில் தரவழைக்கப்பட்டுள்ளது. பழைய ஏற்பாட்டில் உள்ளது போன்று, ஒரு நாட்டைச் சுதந்தரித்துக் கொள்ளுதல் என்ற நோக்கம் புதிய ஏற்பாட்டில் அவ்வளவு முக்கியமானதாக இராவிட்டாலும், கிறிஸ்தவர்கள் தாங்கள் வாழும் நாட்டைப் பொறுத்த மட்டில் ஒரு பொறுப்புக் கொண்டுள்ளனர். குறைந்த பட்சம் இப்போது கிறிஸ்தவர்களின் வேர்கள் அவர்கள் வாழும் நாட்டில் உறுதியாக நடப்பட்டுள்ளன. தேவன் இந்த உலகத்தைப் படைத்து அதை நல்லது என்று அழைத்ததை அவர்கள் அறிந்துள்ளனர். படைக்கப்பட்ட எல்லாவற்றையும் பராமரிப்பவர்கள் என்ற வகையில் தங்களின் பொறுப்பை அவர்கள் உணர்ந்து அறிந்துள்ளனர். நல்ல அரசாங்கத்திற்கு அவர்கள் பொறுப்புள்ள குடிமகன்கள் என்ற வகையில் பங்களிக்கின்றனர். உதவியற்றவர்களுக்கும் தேவையில் உள்ளவர்களுக்கும் அவர்கள் நீதியை வற்புறுத்துகின்றனர்.

மனித சமூகத்திற்குப் பங்களிக்கும் உறுப்பினர்கள் என்ற வகையில் தாங்கள் செய்ய வேண்டிய கடமையைத் தவிர்ப்பதற்குக் கிறிஸ்தவர்களுக்குப் பேதுரு எந்த அடிப்படைத் தளங்களையும் தரவில்லை. அதே வேளையில், பழைய பாடல் ஒன்றின் "here we are but straying pilgrims"[1] என்ற வரிகளில் உள்ள வார்த்தைகளைப் பற்றிக் கிறிஸ்தவர்கள் அறிந்துள்ளனர். சார்லஸ் H. H. ஸ்கோபி அவர்கள், "அங்கு, [கானான்] நாட்டில் தேவனுடைய பிள்ளைகள் வேரூன்றிய தன்மைக்கும் அவர்கள் பரதேசிகளாயிருக்கும்படியான அழைப்பிற்கும் இடையில் வேதவசனத்தின் நிலையான போராட்டம்/இறுக்கம் ஒன்று உள்ளது" என்று நன்கு உற்றுக்கவனித்துள்ளார்.[2] இந்த போராட்டம்/இறுக்கம் என்பது பழைய இஸ்ரவேல் மக்களிடத்தில் உள்ளதைக் காட்டிலும் குறைவாகப் புதிய இஸ்ரவேல் மக்களிடம் இருக்கக் சான்றெதுவும் இல்லை.

*முதல் நூற்றாண்டின் மத்தியதரைக்கடல் பகுதி உலகத்து மக்களுக்கு, நாடல்ல நகரமே அரசியல் பற்றிற்கு உரியதாக இருந்தது. குடிமக்கள், அதிலும் குறிப்பாக செல்வாக்குள்ள மக்கள், தங்கள் நகரில் இருந்த பெருமையைப் பற்றி அதிகம் தீவிரமாயிருக்க மனம் சாய்ந்தனர்.*[3] *ரோமர்கள் வருவதற்கு முன்னர், ஜனநாயக நகரங்களின் குடிமக்கள் யாவரும், நகரத்து விஷயங்களில் சமமான வாக்களிப்பைக் கொண்டிருந்தனர். குடிமக்களோடும் கூட, ஒரு நகரமானது குடியுரிமை இல்லாமல் அங்கு தங்கியிருப்பவர்களையும் கொண்டிருக்கும். வணிகர்கள் மற்றும் பிறர் தலைமுறை தலைமுறையாக அங்கு தங்கியிருக்கலாம். இருப்பினும் அவர்கள் குடியுரிமை அற்றவர்களாக இருப்பார்கள். பேதுருவின் வார்த்தைகளைப் பயன்படுத்துவதென்றால், அவர்கள் [நகரத்து] வாசல்களில் "அந்நியர்களும் பரதேசிகளுமாக" இருந்தனர். பேதுரு பயன்படுத்திய வார்த்தைகள் அவரது வாசகர்களுக்கு, (1) வார்த்தைகளின் பழைய ஏற்பாட்டுப் பயன்பாட்டிலிருந்து (1:17க்கான விளக்கத்தைக் காணவும்) மற்றும் (2) அப்போதைய உலகத்தில் அவ்வார்த்தைகள் பொதுவாகப் பயன்படுத்தப்பட்ட வகையில் இருந்து விளக்கப்படுத்தப்பட்டன.*

*பேதுருவின் வாசகர்கள், தங்கள் குடியிருப்பைப் பரலோகத்தில் கொண்ட மக்களாக இருந்ததால், அவர்கள் மாம்சஇச்சைகளை விட்டு விலகி இருக்க வேண்டியிருந்தது. J. ராம்சே மிக்காயேல்ஸ் அவர்கள் இந்தச் சொற்றொடரை "உங்கள் இயல்பான தூண்டுதல்களைத் துறந்துவிடுங்கள்" என்று மொழிபெயர்த்தார்.*[4] *"இயல்பான தூண்டுதல்கள்" பொல்லாதவைகளாக உள்ளன என்பதற்கான கருத்து ஆலோசனை எதுவும் பேதுருவின் வார்த்தைகளில் இருப்பதில்லை. உணவிற்கான விருப்பம், சுயநிறைவு அல்லது பாலுறவு ரீதியான வெளிப்பாடு ஆகியவை தங்களிலேயே தவறானவைகளாக இருப்பதில்லை. ஒரு நபர் மற்றவருடைய செலவில் சுயநிறைவை அடையும்படி விருப்பங்கள் தூண்டுகிறபோதுதான், அந்த விருப்பங்கள் மாம்ச இச்சைகள் ஆகின்றன. துறக்கப்பட வேண்டிய "மாம்ச இச்சைகள்" என்பவற்றில் பாலுறவுரீதியான ஒழுக்கக் கேடும் உள்ளடங்குகிறது, ஆனால் ஆத்துமாவுக்கு விரோதமாய்ப் போர்செய்கிற மற்ற இச்சைகளும் உள்ளன. அவற்றில் சிலவற்றை அப்போஸ்தலர் ஏற்கனவே பட்டியல் இட்டிருந்தார் (காண்க 2:1). பவுல், "மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும் இச்சிக்கிறது" என்று எழுதினார் (கலாத்தியர் 5:17).*

*இந்த உலகத்தில் தங்கள் குடியிருப்பைக் கொண்டுள்ளவர்கள், புலன் இன்பம் அல்லது மற்றவர்கள் மீது அதிகாரம் ஆகியவற்றிற்கான மன விருப்பங்களால் தூண்டப்பட்டனர். ஆனால் விசுவாசிகளோ, மற்றவர்களின் செலவில் சுயநிறைவைக் கொண்டுவந்து மனத்தூண்டுதல்களில் இருந்து புறம்பே திரும்ப வேண்டியிருந்தனர். ஒருவேளை பேதுரு, தமது முதல் வாசகர்கள் அனுபவித்துக் கொண்டிருந்த உபத்திரவங்களை நோக்கி ஒரு கண் வைத்தவராக, இந்தப் புத்திமதிகளை அளித்திருக்கலாம். இந்த உலகமானது தனது உறுப்பினர்களிடத்தில் இருக்கலாம் என்று அனுமதித்து இருந்த அதே வகையான விஷயங்கள் கிறிஸ்தவர்களிடமும் உள்ளன என்று அவர்களைக் குற்றம் சாட்ட சாத்தியமான இடம் கொடுத்துவிடாதபடி அவர்கள் [கிறிஸ்தவர்கள்] வாழ வேண்டும் என்று அவர் (பேதுரு) விரும்பினார்.*

*இந்த ஒரு இடத்தில் மட்டுமே பேதுரு "ஆத்துமா" (psuchē) என்ற*

வார்த்தையை ஒருமையில் பயன்படுத்தினார். புதிய ஏற்பாட்டில் "ஆத்துமா" என்ற வார்த்தை அடிக்கடி, "ஒரு நபர்" என்பதைத் தவிர அதிகமாக அர்த்தப்படுவதில்லை (உதாரணமாக, "Awe came upon everyone." என்று NRSV வேதாகமமும், "எல்லாருக்கும் பயமுண்டாயிற்று" என்று தமிழ் வேதாகமம் மொழிபெயர்த்துள்ள இடமான நடபடிகள் 2:43ஐக் காணவும்.) ஒரு இடத்தில் இயேசு, ஆத்துமாவை சரீரத்திற்கு மேல் எதிராக அமைத்தார்: "ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களாயிராமல், சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்படவேண்டாம்" (மத்தேயு 10:28). "ஆத்துமா" மற்றும் "ஆவி" ஆகியவற்றின் அர்த்தம் நெருங்கி இருக்கும் வேளைகளும் உள்ளன. இவ்விடத்தில் பேதுரு, "ஆத்துமா" என்ற வார்த்தையை, மனித இயல்பில் உள்ள, கண்ணியம் மற்றும் தேவபக்தி ஆகியவற்றிற்கான உயர்குறிக்கோளை நோக்கிச் சாயும் மனத்துண்டுதல்களைக் குறிக்கப் பயன்படுத்தியிருப்பதாகக் காணப்படுகிறது. "மாம்ச இச்சைகள்" என்பவை உடலில் இருந்து தனிப்படப் பிரிக்கப்படாதவை போலவே, ஆத்துமா என்பது உடலில் இருந்து பிரிக்கப்பட்டு தனிப்பட்டதாக இருக்கும் விஷயம் அல்ல.

***வசனம் 12.*** 1 பேதுரு 2:12 மற்றும் 3:16 ஆகியவற்றிற்கு இடையில் உள்ள இணைகருத்துக்கள் குறிப்பிடத்தக்கவையாகும். இந்த நிருபம் முழுவதிலும் அப்போஸ்தலர், தமது வாசகர்களின் நடக்கை (*anastrophe*), வாழ்வின் நடத்தை பற்றி அக்கறை கொண்டிருந்தார் (1:14-19). கிறிஸ்தவர்களின் நடத்தை அவர்களைச் சுற்றிலும் இருந்த புறதெய்வக் கலாச்சாரத்தாருக்குத் தோற்றம் தந்தது என்பதைப் பற்றி அவர்கள் அறிந்திருக்க வேண்டும் என்று பேதுரு எதிர்பார்த்தார். சட்டநிபுணர்கள் ஒரு மூதுரைக் கொண்டுள்ளனர்: "சட்டம் நியாயமானதாக இருப்பது மாத்திரமல்ல, அது நியாயமானதாகத் தோன்றவும் வேண்டும்." தோற்றங்கள் முனைப்பாக எதிர்பார்க்கப்படுகின்றன. புறதெய்வ வணக்கத்தார் கண்களுக்கு சபை தோற்றமளித்த வகை பற்றிப் பவுலும் அக்கறை கொண்டிருந்தார் (1 கொரிந்தியர் 10:32; கொலோசெயர் 4:5). இயேசு, "மனுஷர் காணவேண்டுமென்று அவர்களுக்கு முன்பாக உங்கள் தர்மத்தைச் செய்யாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்" என்று கூறியபோது தமது சிந்தையில் முற்றிலும் மாறுபட்ட ஒரு விஷயத்தைக் கொண்டிருந்தார் (மத்தேயு 6:1). தேவனைக் கனப்படுத்துதல் என்பதற்கு மாறாக, சுயபுகழ்ச்சிக்கான மனவிருப்பத்தினால் ஊக்குவிக்கப்பட்ட நீதியுள்ள நடத்தை கொண்டிருத்தல் பயனற்றதாக உள்ளது. **புறஜாதிகளுள்குள்ளே நல்நடக்கையுள்ளவர்களாய் நடந்துகொள்ளுங்கள் என்று** பேதுரு கூறியபோது, அவர் தேவனுடைய மகிமையையே சிந்தையில் கொண்டிருந்தார்.

"புறஜாதிகள்" என்ற வார்த்தையை ஒரு யூதர் பயன்படுத்தியபோது, அதன் மூலம் யூதரல்லாதவர்கள் என்பதை அவர் அர்த்தப்படுத்தினார். நான்கு சுவிசேஷங்களிலும் இவ்வார்த்தை இவ்வாறே பயன்படுத்தப்பட்டுள்ளது (உதாரணமாக மத்தேயு 10:5). பேதுரு மற்றும் பவுல் ஆகியோருக்கு, "யூதத்துவத்தன்மை" என்பது மாம்ச வம்சாவழியினாலோ அல்லது விருத்தசேதனம் மற்றும் நியாயப்பிரமாணத்தைச் சடங்காச்சாரமாகக் கடைப்படித்தல் ஆகியவற்றினால்கூட விளக்கப்படுத்தப் படவில்லை. யூதராயிருத்தல் என்பது தேவனுடைய மக்கள் மத்தியில் இருத்தல் என்று அர்த்தப்படுத்தியது என்றால், கிறிஸ்துவைத் தழுவிக்கொண்டவர்களே

உண்மையான யூதர்களாக இருந்தனர் என்றாகி இருக்கும் (ரோமர் 2:28, 29). விஷயம் அப்படி இருக்கும் என்றால், "புறஜாதியார்" என்பது ஒரு புதிய அர்த்தம் கொண்டிருத்தலும் அவசியமாக உள்ளது. பேதுரு இந்த வார்த்தையைப் பயன்படுத்திய வகையில் இது யூதரல்லாதவரை அல்ல ஆனால் கிறிஸ்தவரல்லாதவரையே அர்த்தப்படுத்துகிறது. கிறிஸ்தவரல்லாதவருக்கு ஆங்கிலத்தில் "pagans" என்ற வார்த்தை காணப்படுகிறது. இந்த வித்தியாசத்தைப் பிடித்துவைக்கச் செய்யப்பட்ட முயற்சியே, NIV வேதாகமத்தில் *ethne* என்ற வார்த்தை சுவிசேஷங்களில் காணப்படும்போது அதை "Gentiles" என்று மொழிபெயர்க்கக் காரணமானது, ஆனால் இவ்வசனத்தில் அதே வார்த்தையை "pagans" என்று மொழிபெயர்க்கவும் அதுவே காரணமாயிற்று.

1:6-8ல் பேதுரு, கிறிஸ்தவர்கள் சகித்துக் கொண்டிருந்த சோதனைகளைக் குறிப்பிட்டார். இப்போது அவர் அந்த சோதனைகள் கொண்டு வந்தவற்றைப் பற்றிக் குறிப்புக் கொடுத்தார். அந்த வேளை வரையிலும், கிறிஸ்தவம் ஒரு சட்டவிரோதமான மார்க்கம் என்ற அலுவலகரீதியான உத்தரவு ரோமாபுரியில் இருந்து வந்திருக்கவில்லை, ஆனால் அது [கிறிஸ்தவம்] புறதெய்வ சமூகத்திற்குப் புதியதாகவும் அந்நியமானதாகவும் இருந்தது. விசுவாசிகள், தாங்கள் மற்றவர்களின் இரகசிய இகழ்ச்சி பேச்சுக்கும் மோசமான எண்ணத்திற்கும் ஆட்பட்டிருந்ததாகக் கண்டனர். புறஜாதிகள் உங்களை **அக்கிரமக்காரரென்று விரோதமாய்ப் பேசும் விஷயத்தில்** என்ற வார்த்தைகளினால் பேதுரு அர்த்தப்படுத்தியது என்ன என்பதைப் புரிந்துகொள்ளச் சிறிதளவு கற்பனையே தேவைப்படுகிறது. "விரோதமாய்ப்பேசுதல்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள சொல்லின் பெயர்ச்சொல் வடிவமானது, அப்போஸ்தலரின் வாசகர்கள் ஒழித்துப்போட வேண்டிய விஷயங்களாகக் கூறப்பட்டவற்றின் மத்தியில் இருந்தது ("சகலவித புறங்கூறுதலையும்" 2:2). கிறிஸ்தவர்கள் புறங்கூறப்பட்டிருந்தாலும் அதே வகையாகப் பதில்செய்யக் கூடாதிருந்தனர்.

பேதுருவின் வாசகர்கள் புறங்கூறப்படுவார்கள் என்ற விஷயம் பேதுருவின் கவலைக்கு உரிய விஷயமாக இருக்கவில்லை. அதை அவர் எதிர்பார்த்தார். புறங்கூறும் குறிப்பு எந்த வகையிலும் உண்மையாக இருந்துவிடலாகாது என்பதே அவரது அக்கறைக்குரிய விஷயமாக இருந்தது. அதுமட்டும் அல்ல, அவர் தமது வாசகர்களின் பரிசுத்தமான வாழ்வானது, அவிசுவாசிகளிடம் இருந்து வரும் புறங்கூறுதலான குறிப்புகளில் உள்ள விஷயங்களை உடனடியாக மதிப்பற்றதாக்கும் வகையில் மிகவும் தெளிவானதாக இருக்க வேண்டும் என்று அவர் [பேதுரு] விரும்பினார். **உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, அவற்றினிமித்தம் சந்திப்பின் நாளிலே தேவனை மகிமைப்படுத்தும்படியான சிந்தைகொண்ட நியாயமான எண்ணமுள்ள புறதெய்வ வணக்கத்தார்** இருப்பார்கள். 1:6-8ல் அப்போஸ்தலர் தமது வாசகர்களுக்கு நேரிட்ட சோதனைகளைக் குறிப்பிட்டார்; இங்கு அவர் புறங்கூறப்படுதலினால் அவர்களுக்கு நேரிட்ட சோதனைகளைப் பற்றி மிகவும் குறிப்பாக ஆழ்ந்து சிந்தித்தார். இவ்விரு இடங்களிலும் சோதனைகளின் விளைவுகள் கிறிஸ்தவ நடக்கையுடன் சேர்ந்து, தேவனுக்கு மகிமையை விளைவிப்பதாக இருந்தது. அவரது மகிமையும் கிறிஸ்தவர்கள் பழியில் இருந்து விடுவிக்கப்படுதலும், "இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது" (1:7) என்ற

“சந்திப்பின் நாளிலே” உணர்ந்தறியப்படும்.

புதிய ஏற்பாட்டில் இந்த இடத்தில் மாத்திரமே, கர்த்தருடைய மறுவருகையின் நாள் “சந்திப்பின் நாள்” என்று அழைக்கப்பட்டுள்ளது. LXX வேதாகமத்தில் தேவன் ஆச்சரியமான மற்றும் மகிமையுள்ள வகையில் செயல்படுதலுக்கான வார்த்தை இங்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. சிலவேளைகளில், ஆண்டவருடைய சந்திப்பு என்பது அவரது மக்களின் பயனுக்கானதாக உள்ளது (யாத்திராகமம் 3:16), மற்றும் சிலவேளைகளில் அது நியாயத்தீர்ப்பிற்கானதாக உள்ளது (எரேமியா 10:15). லூக்கா 19:44ல் இயேசு, யூதர்களிடம் “உனக்குக் கிடைத்த இந்த நாளிலாகிலும்” தம்மை ஆண்டவர் என்று யூதர்கள் ஏற்றுக்கொள்ளாததால் [பின்விளைவு மோசமானதாயிருக்கும்] என்று கூறினார். இயேசுவின் இவ்வுலக வருகை, அவரது மாம்சப்பிரகாரமான தோற்றம் என்பது இஸ்ரவேல் மக்களுக்கு நேர்மறையான ஒரு நிகழ்வாக இருந்தது, ஆனால் அதை உணர்ந்தறிய அவர்கள் தவறிவிட்டனர். [சந்திப்பின்நாள் என்ற] இவ்வார்த்தையைப் பேதுரு பயன்படுத்தியவகையில் இது, நியாயத்தீர்ப்புக்கு ஆண்டவர் மறுபடியும் வரும்நாளைக் குறிப்பதாகக் காணப்படுகிறது. கிறிஸ்தவர்களைப் புறங்கூறி அவர்களைத் துன்புறுத்தியவர்களை நியாயந்தீர்க்கக் கிறிஸ்து வரும்போது, அவரால் கிறிஸ்தவர்கள் பழிச்சொல்லில் இருந்து விடுவிக்கப்படுவார்கள்.[5] NRSV வேதாகமத்தில் இது “... and glorify God when he comes to judge” என்று சரியான கருத்துணர்வைத் தருகிறது.

## ஆட்சி செய்யும் அதிகாரிகளுக்குக் கீழ்ப்படிதல் (2:13-17)

இந்த நிருபத்தின் பின்தொடரும் பகுதியில் (2:13-3:7), வாழ்வின் மூன்று வட்டாரங்களில் கீழ்ப்படிதலை அப்போஸ்தலர் வேண்டிக்கேட்டுக்கொண்டார்: (1) அரசுகளுக்குக் குடிமக்கள், (2) எஜமானர்களுக்கு அடிமைகள் மற்றும் (3) கணவர்களுக்கு மனைவிகள். இந்த புத்திமதிகள், என்ற “நீங்கள் [கிறிஸ்தவர்கள்] அவர்களுக்குள்ளே [புறஜாதிகளுக்குள்ளே] நல்நடக்கையுள்ளவர்களாய் நடந்துகொள்ளுங்கள்” என்ற 2:12ம் வசனத்தின் விரிவாக்கமாக உள்ளன. அதிகாரத்திற்குத் தக்கவகையில் மதிப்பளித்தல் என்பதை அடிப்படையாகக் கொண்ட ஒழுங்குள்ள சமூக வாழ்வு என்பதே இவை யாவற்றிற்கும் பொதுவான அம்சமாக உள்ளது.

புதிய ஏற்பாட்டின் நிருபங்களில், வீட்டில் உள்ள பல்வேறு உறுப்பினர்களின் பொறுப்புகள் எடுத்துரைக்கப்பட்ட மற்ற இடங்களும் உள்ளன. இவை யாவையுமே, கீழான இடத்தில் இருப்பவர்கள் அதிகாரத்தில் இருப்பவர்களுக்குக் கீழ்ப்படிதலின் அவசியத்தை வலியுறுத்துகின்றன. இவைகள் அடிக்கடி, “வீட்டாருக்குரிய சட்டக்கோட்பாடுகள்” என்று அல்லது ஜெர்மன் ஆர்க்கிக் வார்த்தையைப் பயன்படுத்துவதென்றால் *Haustafeln* (ஒருமையில் *Haustafel*) என்று அழைக்கப்படுகின்றன. எபேசியர் 5:22-6:9 மற்றும் கொலோசெயர் 3:18-4:1 ஆகியவை, 1 பேதுரு நிருபத்தைப் பெரிதும் ஒத்துள்ள “சட்டமுறைமைகளாக” உள்ளன, 1 தீமோத்தேயு 2:8-15 மற்றும் தீத்து 2:1-10; 3:1, 2 ஆகியவையும் சில ஒற்றுமைகளைக் கொண்டுள்ளன.

புதிய ஏற்பாட்டிற்குச் சமகாலத்தில் எழுதப்பட்ட, கிரேக்கரில் இருந்து யூதம ார்க்கத்தைத் தழுவிய (யூதத்துவ, கிரேக்க மற்றும் இலத்தீன் பின்னணிகளைக் கொண்ட) எழுத்தாளர்களின் எழுத்துக்கள், வீட்டு உறுப்பினர்களுக்கான சட்டங்களாக, புதிய ஏற்பாட்டில் உள்ள "சட்டமுறைமைகளுக்கு" இணையான சிலவற்றை அளிக்கின்றன. பரஸ்பரம் செயல்படுதல் என்பது உலகப் பிரகாரமான இந்த எழுத்துக்களுடன் ஒப்பிடும்போது, புதிய ஏற்பாட்டில் உள்ள முதன்மை வேறுபாடுகளில் ஒன்றாக உள்ளது. புதி ய ஏற்பாட்டு சட்டமுறைமைகளில், அடிமைகளைப் போன்றே எஜம ானர்களும், அடிமைகளுடனான தங்கள் நடைமுறைகளில் பொறுப்பும் கடமையும் கொண்டுள்ளனர், மற்றும் மக்களைப் போன்றே அரசாங்கமும் தனக்குக் கீழ்ப்பட்டிருக்கும் மக்களுக்குச் செய்ய வேண்டிய பொறுப்புகளைக் கொண்டுள்ளன.

சட்டமுறைமைகள் மற்றும் அவற்றின் பொதுவான பண்புகள் பற்றிக் கணிசமான கலந்துரையாடல் கல்வியாளர்கள் மத்தியில் இருந்துள்ளது. புதிய ஏற்பாட்டிலும் உலகத்திலும் சட்டமுறைமைகள் பயன்படுத்தப்பட்டுள்ள வகையைப் பற்றி நாம் கற்றுக்கொள்கையில், பேதுருவின் அறிவுறுத்துதல்களினுடைய இயல்பும் மறைவான கருத்துக்களும், ஓரளவிற்குத், தெளிவாகும்.

**[13]நீங்கள் மனுஷருடைய கட்டளைகள் யாவற்றிற்கும் கர்த்தர் நிமித்தம் கீழ்ப்படியுங்கள். [14]மேலான அதிகாரமுள்ள ராஜாவுக்கானாலுஞ்சரி, தீமைசெய்கிறவர்களுக்கு ஆக்கினையும் நன்மைசெய்கிறவர்களுக்குப் புகழ்ச்சியும் உண்டாகும்படி அவனால் அனுப்பப்பட்ட அதி காரிகளுக்கானாலுஞ்சரி, கீழ்ப்படியுங்கள். [15]நீங்கள் நன்மைசெய்கிறதினாலே புத்தியீன மனுஷருடைய அறியாமையை அடக்குவது தேவனுடைய சித்தம ாயிருக்கிறது. [16]சுயாதீனமுள்ளவர்களாயிருந்தும், உங்கள் சுயாதீனத்தைத் துர்க்குணத்திற்கு மூடலாகக் கொண்டிராமல், தேவனுக்கு அடிமை களாயிருங்கள். [17]எல்லாரையும் கனம்பண்ணுங்கள்; சகோதரரிடத்தில் அன்புகூருங்கள்; தேவனுக்குப் பயந்திருங்கள்; ராஜாவைக் கனம்பண்ணுங்கள்.**

***வசனம் 13.*** நீங்கள் மனுஷருடைய கட்டளைகள் யாவற்றிற்கும் கர்த்தர் நிமித்தம் கீழ்ப்படியுங்கள் என்ற பேதுருவின் வேண்டுகோள் பொதுவானதாக உள்ளது. "மனுஷருடைய கட்டளைகள் யாவற்றிற்கும்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள சொற்றொடர் (*pasēi anthrōpinēi ktisei* என்ற) கடினமான ஒன்றாக உள்ளது. நேரடிப்பொருளில் இது, "மனிதப்படைப்பு யாவற்றிற்கும்" என்று அர்த்தப்படுகிறது. அப்போஸ்தலருடைய வாசகர்கள், மனிதருடைய விஷயங்களில், முறையான சமூக அமைப்பை ஏற்படுத்துவதற்காக உள்ள பொருளாதார அல்லது குடிமை நிறுவன ஏற்பாடுகளுக்கு, தகுந்த வகையில் மதிப்பு தருபவர்களாகவும் கீழ்ப்படிதல் உள்ளவர்களாகவும் இருக்கும்படி அவர்களை அப்போஸ்தலர் வற்புறுத்திக் கேட்டுக் கொண்டார். பேதுருவின் புத்திமதி அரசாங்கங்களுக்குக் கீழ்ப்படிதல் என்பதுடன் மட்டுப்படுத்தப் பட்டிருக்கவில்லை, ஆனால் பின்தொடரும் வசனங்கள், இதில் அரசாங்கங்கள்

*உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும் என்று வற்புறுத்துகின்றன. சிலவேளைகளில் "வீட்டு தொடர்பான சட்ட முறைமைகள்," வீட்டில் உள்ள உறுப்பினர்கள் அரசு அதிகாரிகள் போல மதிக்கப்பட வேண்டியுள்ள வகையில் உள்ள அறிவுறுத்துதல்களை உள்ளடக்கி இருந்தன. 1 தீமோத்தேயு 2:1, 2ல் பவுல், "எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பங்களையும் ஜெபங்களையும் வேண்டுதல்களைகளும் ஸ்தோத்திரங்களையும் பண்ணவேண்டும் ... ராஜாக்களுக்காகவும், அதிகாரமுள்ள யாவருக்காகவும் அப்படியே செய்யவேண்டும்" என்று வேண்டிக் கேட்டுக்கொண்டார். தீத்து 3:1ல் அவர், "துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் கீழ்ப்படிந்து அடங்கியிருக்கவும், சகலவிதமான நற்கிரியைகளையும் செய்ய ஆயத்தமாயிருக்கவும் ... அவர்களுக்கு நினைப்பூட்டு" என்று கூடுதலாகக் கூறினார். எபேசியர் 5:22-6:6 அல்லது கொலோசெயர் 3:18-4:1 ஆகிய பகுதிகளில் ஆட்சியாளர்களுக்குக் கீழ்ப்படிதல் பற்றிய உரைகள் எதுவும் இல்லை.*

*பேதுருவின் வார்த்தைகள் மற்ற "வீட்டு சட்டமுறைமைகளுடன்" ஒற்றுமைத்தன்மையைப் பகிர்ந்து கொள்ளுகையில் அவரது வேண்டுகோளானது நடைமுறை மரபு மொழியாக மாத்திரமே உள்ளது என்ற வகையில் நாம் அதை ஒதுக்கி விடலாகாது. அப்போஸ்தலர் தமது வாசகர்கள் வாழ்ந்த குறிப்பிட்ட சமூகத்தின் சந்தர்ப்பப் பொருளில் தமது நிருபத்தில் இதை உரைப்பதால், 1 பேதுரு நிருபத்தில் உள்ள "சட்டமுறைமை" அது உள்ளபடியான வடிவத்தை மேற்கொள்கிறது. அவர்களின் நிலைப்பாடு வலுக்குறைந்ததாக இருந்தது. அரசு அதிகாரிகளின் ஐயப்பாட்டைத் தூண்டக்கூடிய எதையும் அவர்கள் செய்யக் கூடாது என்று அவர்களைப் பேதுரு வேண்டிக்கேட்டுக்கொண்டார். அதற்கு நேர்மாறாக அவர்களின் நடத்தையானது கண்டனத்திற்கு அப்பாற்பட்டதாக இருக்க வேண்டும். அவர்கள் "மனுஷருடைய கட்டளைகள் யாவற்றிற்கும்" தங்களுடைய கீழ்ப்படிதலில் உதாரணத்துவமாக இருக்க வேண்டும். அவர்கள் "அரசராகிய இயேசுவை" அறிவித்தபடியால், கிறிஸ்தவ சூழ்நிலையின் நிச்சயமற்ற தன்மை ஒரு பகுதி வந்திருந்தது. பவுலுக்கும் அவரது துணையாளர்களுக்கும் எதிராகத் தெசலோனிக்கேய யூதர்கள் கொண்டு வந்திருந்த குற்றச்சாட்டில் உண்மை கொஞ்சம் இருந்தது: "இவர்களெல்லாரும் இயேசு என்னும் வேறொருவனை ராஜா என்று சொல்லி, இராயனுடைய கட்டளைகளுக்கு விரோதமாகச் செய்கிறார்கள்" (நடபடிகள் 17:7). மேலும் "மீட்பர்" மற்றும் "சர்வவல்லவர்" போன்ற சொற்றொடர்கள் இராயனுக்கே முறைமையாகப் பயன்படுத்தப்பட்டிருந்தன. கிறிஸ்தவர்களுக்கோ இயேசு ஒருவரே மீட்பராக இருந்தார், தேவன் ஒருவரே சர்வவல்லவராக இருந்தார். கிறிஸ்தவர்களின் சொல்பதங்களே அவர்களுக்கு ஒரு அபாயத்தை முன்னிறுத்தின.*

*கிறிஸ்தவர்கள் அதிகாரமுள்ள ராஜாவுக்கு ... கீழ்ப்படிய வேண்டும் என்ற அப்போஸ்தலரின் வேண்டுகோள், கேள்விகளை எழுப்புகிறது: 1 பேதுரு நிருபத்தை முதலில் வாசித்த வாசகர்கள் அரசாங்கத்தின் உபத்திரங்களை அனுபவித்துக் கொண்டிருந்தனரா? இதனால்தான் அவர்கள் தங்களை ஆளுவோருக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்று அப்போஸ்தலர் வேண்டிக்கொண்டாரா? இந்த தொடக்க காலத்தில் ஆசியாவின் உள்ளூர் அரசாங்கங்களினால் கிறிஸ்தவமானது முறைப்படியான அடக்கு முறையை*

அனுபவித்தது என்தற்குப் புதிய ஏற்பாட்டிலோ அல்லது அதன் சமகால உலகரீதியான ஆதாரமூலங்களிலோ சாட்சியம் எதுவும் இல்லை. ரோம ாபுரியில் இருந்து கிறிஸ்தவத்திற்கு எதிரான பிரகடனம் எதுவும் நிச்சயமாக இந்த வேளையில் இல்லை. இருப்பினும் அது, குடிமை அதிகாரிகளிடத்தில் இருந்து கிறிஸ்தவர்கள் உடனடியான அபாயம் எதையும் எதிர்கொள்ளவில்லை என்று அர்த்தப்படுவதில்லை. கிறிஸ்தவர்களுக்கும் எதிராகக் குற்றச்சாட்டுகள் கொண்டுவரப்பட்டபோது. அவர்கள் புறங்கூறப்பட்டனர் (2:12), அவர்கள் சுமக்க வேண்டிய அழுத்தங்களை உள்ளூர் அதிகாரிகள் கொண்டு வந்தி ருப்பார்கள் என்று எதிர்பார்க்கப்பட முடியும். பேதுருவின் வாசகர்கள் குடிமை அதிகாரிகளைக் கிறிஸ்தவர்கள் பழித்து வெறுக்கின்றனர் என்ற கருத்தை வளர்க்கக் கூடிய பகைமை உணர்வின் வளையம் எதையும் தவிர்க்க வேண்டும் என்று பேதுரு விரும்பினார்.

அரசாங்கத்துடன் கிறிஸ்தவரின் உறவு சிரமமானதாக இருக்க முடியும். அரசாங்கங்கள் இராஜரீகத்தை உறுதிப்படுத்துகின்றன. நல்விசுவாசத்தில் விசுவாசிகள் செய்ய இயலாத சில விஷயங்களை, அவர்கள் செய்யும்படி அரசாங்கங்கள் கேட்டுக்கொள்ளும் சாத்தியக்கூறு எப்போதுமே உள்ளது. கிறிஸ்துவைப் பற்றிப் பிரசங்கிக்கக் கூடாது என்ற கட்டளையை பேதுருவும் மற்ற அப்போஸ்தலர்களும் யூத அதிகாரிகள் மூலமாக எதிர்கொண்டபோது, “மனுஷருக்குக் கீழ்ப்படிவதைப்பார்க்கிலும் தேவனுக்குக் கீழ்ப்படிகிறதே அசியமாயிருக்கிறது” என்று பேதுரு பதில் அளித்தார் (நடபடிகள் 5:29). ஒருவர், கிறிஸ்துவுக்கு உண்மையுள்ளவராக இருந்து கொண்டே தம்மீது அதிகாரம் செலுத்தும் அரசாங்கத்திற்குக் கீழ்ப்படிய இயலாத அசாதராணம ான சூழ்நிலைகள் எழும்புகின்றன. இருப்பினும் சாதாரண சூழ்நிலைகளில், வாழ்வின் அன்றாடத் தேடுதல்களில், தகுதியான விஷயங்களைச் செய்து முடிப்பதற்கு வடிவமைப்பும் அதிகாரமும் அவசியமாக உள்ளன. “அதிகாரிகள் நற்கிரியைகளுக்கல்ல, துர்க்கிரியைகளுக்கே பயங்கரமாயிருக்கிறார்கள்” (ரோமர் 13:3). பேதுரு நிருபத்தின் வாசகர்கள் ஒருவேளை கண்டிருக்கக் கூடும்படிக்கு, அதிகாரிகள் அடக்குபவர்களாக இருக்கும்போது, அவர்களை விரோதத்துடன் பற்றிக்கொள்ளும்படியாகவோ அல்லது அவர்களுக்கு வெறும் உதடுகளினால் சேவிப்பதைத் தரும்படியாகவோ சோதிக்கப்படலாம். அது சூழ்நிலையை இன்னும் மோசமாக்குகிறது, கிறிஸ்தவர்கள் தங்களுக்காக இல் லாவிட்டாலும், “கர்த்தர் நிமித்தம்” அதிகாரிகளை மதிக்க வேண்டும் என்று பேதுரு விரும்பினார்.

**வசனம் 14.** “இராஜா” என்பவர் மிக உயர்ந்த அதிகாரத்தைக் கொண்டிருந்தாரென்று பேதுரு சற்றுமுன்தான் கூறியிருந்தார். ரோமர்கள் அரசர்களுடனான தங்கள் குறிப்பிடத்தக்க வரலாற்றின் காரணமாக,[6] தங்கள் ஆட்சியாளரை அரசர் என்று அழைக்கமாட்டார்கள். இருந்தபோதிலும் பேரரசர், கிழக்கத்திய எதேச்சாதிகாரி போன்றே அதிமாகச் செயல்பட்டார். வெகுஜனப் பேச்சு வழக்கில் பேரரசர் இராஜாவாக இருந்தார். விசுவாசிகள் அரசருக்குக் கீழ்ப்படிய வேண்டியது மட்டுமின்றி அவனால் அனுப்பப்பட்ட அதிகாரிகளுக்கும் கீழ்ப்படிய வேண்டும். “அதிகாரிகள்” என்ற (h□gem□n) வார்த்தை, ரோம உயர் அலுவலர்களையும் உள்ளூர் நகர அதிகாரிகளையும் உள்ளடக்கிய பொதுவான சொற்றொடராக உள்ளது.

பேதுருவின் வாசகர்கள் சிறிய ஆசியாவின் நான்கு பெரிய ரோம மாகாணகங்களில் வாழ்ந்தனர்.[7] அவற்றில் இரண்டு மாகாணங்களான ஆசியாவும் பொந்து/பித்தினியா தேசமும், ஓராண்டு அடிப்படையில் ரோம செனெட் சபையினால் அனுப்பப்பட்டிருந்த ஆளுநர்களால் ஆட்சி செலுத்தப் பட்டிருந்தன. மற்ற இரண்டு மாகாணங்களான கலாத்தியாவும் கப்பதோக்கி.ாவும், பேரரசருக்கு நேரடியாகப் பதில் அளிக்க வேண்டும் என்பது கோட்பாட்டளவில் இருக்கையில், உண்மையில் பேரரசர் கட்டுப்பாடு செலுத்தினார். எல்லா ஆளுநர்களும் "அவராலேயே அனுப்பப்பட்டனர்" என்று கூறுதல் மிக அரிதாகவே தவறான பிரதிநிதித்துவமாக இருக்கும். ஆளுநர்கள் தங்கள் மனவிருப்பப்படி ஆளுகை செய்தனர், அவர்களுக்குப் பின்னால் ரோமாபுரியின் முழு அதிகாரமும் இருந்தது. புதிய ஏற்பாட்டில் எதிர்கொள்ளப்பட்ட இரண்டு அதிபதிகள். செர்கியு பவுல் (நடபடிகள் 13:7) மற்றும் கல்லியோன் (நடபடிகள் 18:12) ஆகியோர் மாத்திரமே. அன்றாட வாழ்வு விஷயங்களில், ஆசியாவின் குடிமக்கள், ஆளுநர்கள் போன்ற உயர் அதிகாரிகளுடன் மறைமுகாக மாத்திரமே தொடர்புகொள்ளுவார்கள். பேதுருவின் வாசகர்கள், நீதிபதிகள், காவலர்கள் போன்ற உள்ளூர் அதிகாரிகளுக்குக் கீழ்ப்படிந்து இருந்தபோது, அவர்கள் தங்கள் மேல் அதிகாரம் உள்ளவர்களான ஆளுநர்களுக்கும் இராஜாக்களுக்கும் கீழ்ப்படிந்தனர் என்றானது.

(இந்த நிருபம் எழுதப்பட்ட காலத்தில்) கிறிஸ்தவர்கள் அரசு அதிகாரிகளை எதிர்ப்பவர்கள் ஆவதற்குக் காரணம் எதுவும் இருக்கவில்லை. முறையான சமூகம் என்பது நாட்டின் அந்நியரும் பரதேசிகளுமான இருப்பவர்களுக்கு அனுகூலமானதாகவே இருக்கிறது. ஆட்சியாளர்கள் கைகளில் ஒன்றும் அறியாத மக்கள் துன்புறும் தனிப்பட்ட சூழ்நிலைகள் இருக்கையில், அரசு அதிகாரிகள் தீமைசெய்கிறவர்களுக்கு ஆக்கினையும் நன்மைசெய்கிறவர்களுக்குப் புகழ்ச்சியும் உண்டாகும்படியாகவே நியமிக்கப்பட்டுள்ளனர். கிறிஸ்தவர்கள் நன்மை செய்கிறவர்களுக்குப் புகழ்ச்சியும் உண்டாகும்படியாகவே நியமிக்கப்பட்டுள்ளனர். கிறிஸ்தவர்கள் நன்மை செய்கிறவர்கள் மத்தியில் இருந்தனரா என்பது கேள்வியாக இருக்கவில்லை. பவுலும் இதேவகையில் வாதிட்டார். ஆள்பவர் "தேவஊழியக்காரனாயிரு" ந்தார் (ரோமர் 13:4). பேதுருவோ பவுலோ, அரசர்களின் தெய்வீக உரிமைக்காக வாதிடவில்லை. அதற்கு பதிலாக அவர்கள், கிறிஸ்தவர்கள் தாங்கள் வாழும் சமூகத்தில் பங்களிக்கும் உறுப்பினர்களாக இருந்தனர் என்பதில் மனநிறைவு அடைந்தனர். ஆகவே, சாதாரண சூழ்நிலைகளில், அவர்கள் முறையான அரசை ஆதரிப்பதற்காகத் தங்கள் செல்வாக்குகளையும் முயற்சிகளையும் விட்டுக்கொடுப்பார்கள்.

**வசனம் 15.** குடிமை அதிகாரிகளுக்குக் கிறிஸ்தவர்கள் மதிப்பு நிறைந்த வகையில் கீழ்ப்படியும்போது, பின்வரும் நேர்மறையான விளைவுகள் ஏற்படுகின்றன: (1) அவர்கள் தேவனுடைய சித்தத்தைச் செய்கின்றனர், மற்றும் (2) அவர்கள் புத்தியீன மனுஷருடைய அறியாமையை அடக்குகின்றனர். மற்றவர்களின் அறியாமையின் மூலமாக மாத்திரமே விசுவாசிகள் மீதி பொல்லாங்கு வருகிறது என்று ஆலோசனை சொல்வதில் பேதுரு உபகாரியாக இருக்கவில்லை. கிறிஸ்தவர்களைப் புறம்பேசுபவர்கள், அறியாமை

உள்ளவர்களாகவும் அதே வேளையில் குரோதம் உள்ளவர்களாகவும் இருந்தனர். இருப்பினும் கிறிஸ்தவர்கள் மீது பகைமையின் ஆதராமுலங்களாக இருந்தவர்கள், தங்களின் சொந்தமான மிகச்சிறந்த ஆர்வம் எது என்பதை உணர்ந்தறியத் தவறினர் என்ற மறைவாக கருத்து இங்குள்ளது. நசரேயனாகிய இயேசு, நற்தன்மை மற்றும் ஞானம் ஆகிய இரண்டிற்கும் ஆதாரமூலம ாக இருக்கிறார். அவரை உலகத்தின் பொல்லாங்கும் அறியாமையுமே எதி ர்க்கின்றன. கிறிஸ்தவர்களின் நற்பெயரைக் கெடுக்கிறவர்களின், பொல் லாங்கு மற்றும் அறியாமை ஆகிய இரண்டையுமே "வாயடைத்தலுக்கு" சரியானவற்றைச் செய்வது என்பதே கிறிஸ்தவர்களுக்குள்ள வழியாகும்.

**வசனம் 16.** பேதுருவின் வாசகர்கள் அதிகாரத்திற்குக் கீழ்ப்படிந்தி ருக்க வேண்டும் என்று அவர்களை வற்புறுத்திக் கேட்டுக்கொண்ட அதேவேளையில் பேதுரு, அவர்களின் சுதந்தரம் பற்றியும் அவர்களுக்கு நினைவூட்டினார். கீழ்ப்படிதலும் சுதந்தரமும் ஒன்றாக நிற்கின்றன. கிரேக்க ரோம உலகத்தில், சுதந்தரமான மனிதனை அடிமையினின்று பிரித்த வித்தி யாசத்தைப் பார்க்கிலும் அதிகம் கண்டிப்பானது வேறு ஒன்றுமே இல்லை. வித்தியாசம் பற்றிக் கிறிஸ்தவர்கள் கவலைப்படவில்லை. அடிமைக்கு, "அடிமையானவனானாலும், சுயாதீனமுள்ளவனானாலும் அவனவன் செய்கிற நன்மையின்படியே கர்த்தரிடத்தில் பலனை அடைவானென்று அறிந்து, மனுஷருக்கென்று ஊழியஞ்செய்யாமல், கர்த்தருக்கென்றே நல்மனதோடே ஊழியஞ்செய்யுங்கள்" என்று பவுல் கூறினார் (எபேசியர் 6:7, 8). அடிமையின் எஜமானருக்கு "அவர்களுக்கும் உங்களுக்கும் எஜமானானவர் பரலோகத்தில் இருக்கிறார்" என்றும் அவர் கூறினார் (எபேசியர் 6:9). சுதந்தர மனிதர் கிறிஸ்துவுக்கு அடிமையாக இருந்தார், மற்றும் அடிமை தேவனுக்குச் சுதந்தரம ானவராக இருந்தார். சுதந்தரம் மற்றும் அடிமைத்தனம் ஆகியவை சுவிசேஷ வரலாற்றில் ஒரு வினோதமான உறவைக் கொண்டுள்ளன. நாசரேத்தூர் ஜெப ஆலயத்தில் இயேசு, "சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும் ... பிரசித்தப்படுத்தவும், என்னை அனுப்பினார்" என்ற ஏசாயாவின் வார்த்தைகளைக் குறிப்பிட்டுக் காண்பித்தார் (லூக்கா 4:18). பவுல், "கிறிஸ்து நமக்கு உண்டாக்கின சுயாதீன நிலைமை" என்று நாடகத்துவமாக உறுதிப்படுத்தினார் (கலாத்தியர் 5:1). இருப்பினும் பவுல் தமது அந்த நிருபத்தை தம்மையே கிறிஸ்துவின் அடிமை (*doulos*) என்று அழைத்தே தொடங்கினார் (கலாத்தியர் 1:10). [தமிழ் வேதாகமத்தில் இவ்விடத்தில் ஊழியக்காரன் என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது.]

NASB வேதாகமம் இவ்வசனத்தின் தொடக்கத்தில் ஒரு வினைச்சொல்லை இட்டுள்ளது, ஆனால் அது கிரேக்க மொழி வேதாகமத்தில் இருப்பதில்லை. 2:13ன் கடைசி வார்த்தைகள் 2:16 உடன் பாராட்டத் தக்க வகையில் பொருந்துகின்றன: சுயாதீனமுள்ளவர்களாயிருந்தும் - இருப்பினும் சுயாதீனம் உள்ளவர்கள் தேவனுக்கு அடிமைகளாயிருக்கின்றனர் - "கீழ்ப்படியுங்கள்." ஒருவர் சவுக்கினால் அடிக்கப்படுதல் அல்லது மரணம் என்பதே பதிலாக பதிலியாக இருக்கும் என்ற நிலையிலும் மனப்பூர்வமாய்க் கீழ்ப்படியலாம். விசுவாசிகள் அரசாங்கங்களுக்குக் கீழ்ப்படியும்போது தங்கள் சுதந்தரத்தைக் கைவிட்டு விடவில்லை என்பதை அறிய வேண்டும். மனிதர்களின் சட்டங்களுக்கு முன்னதாகக் தேவனுடைய சட்டங்கள்

இருக்க வேண்டும் என்பதற்கு இணங்காமலே ஒருவர் சட்டங்களுக்குக் கீழ்ப்படியலாம். எப்படியிருப்பினும், கீழ்ப்படியத் தேர்ந்து கொள்ளும் நபர் சுதந்தரமானவராகவே இருக்கிறார். கிறிஸ்தவ சுதந்தரம் என்பது பின்வரும் வேண்டுகோளின் அடிப்படையில் உள்ளது; இயேசுவைக் கர்த்தராக உரிமை கொண்டவர் அவருக்குக் கீழ்ப்படிகிறார்; கிறிஸ்தவர் தமது வாழ்வின் வழியை மனதில் கொள்கிறார். இயேசுவே அவரது சொந்த சித்தமாகிறார் இயேசு மக்களைப் பார்வையற்ற கீழ்ப்படிதலுக்குக் அழைப்பதில்லை. அவர் தம்மை நேசிக்கும்படியாகவே மக்களை அழைக்கிறார். கர்த்தரை நேசிப்பவர்கள், தங்கள் சொந்த சித்தமானது அவரது சித்தத்துடன் பின்னிப் பிணைந்து விடுவதால், அவரைச் சேவிக்கின்றனர். அவர்கள் "தேவனுடைய அடிமைகள்" என்ற வகையில் சுதந்தரமான கீழ்ப்படிதலில் வாழ்கின்றனர். கட்டுப்பாடற்ற சுதந்தரத்தின் நகரத்துவ இருப்பு என்பதே இதற்குப் பதிலியாக உள்ளது.

தொடக்கத்தில் இருந்தே, கிறிஸ்துவின் சரீரத்துக்குள்ளும் அதற்குப் புறம்பேயும், கீழ்ப்படிதலுள்ள சுதந்தரத்தின் கருத்தைப் புரிந்து கொள்ளத் தவறியவர்கள் இருந்துள்ளனர். சட்டவியத்தின் அடிமைத்தனம் என்பது சிலரின் பதில் செயலாக உள்ளது. இயேசு ஆண்டவராக இருக்கிறார் என்று விசுவாசித்தலில் சிலர், அவரது அதிகாரத்திற்குப் பயன்படுவதால் கீழ்ப்படிதலின் சுமையைச் சுமக்கின்றனர். மற்ற விசுவாசிகள், கீழ்ப்படிதலுள்ள சுதந்தரத்தைப் புரிந்துகொள்ளத் தவறுவதால், தேவனுடைய கிருபையை தவறாக யூகித்துக்கொள்கின்றனர். சுதந்தரம் என்பது உரிமத்திற்குச் சாக்குப்போக்காகிறது. உங்கள் சுயாதீனத்தைத் துர்க்குணத்திற்கு மூடலாகக் கொண்டிராமல், என்று பேதுரு எழுதியபோது அவர், இந்தப் பிந்திய வகையினருக்கு கல்விபுகட்ட விரும்பினார்.

பவுலின் விரோதிகள், பேதுரு தடைசெய்ய இந்த கிருபையின் உபதேசம் பற்றியே அவர்மீதி குற்றம் சுமத்தினர். அவர்கள், பவுலின் உபதேசம் பாவத்தை ஊக்குவிப்பதாகக் கூறினர். அவர்கள், "பாவம் எவ்வளவு அதிகமாகிறதோ, அவ்வளவுக்குக் கிருபையும் அதிகமாகும்! நாம் பாவம் செய்வோமாக அப்போதுதான் கிருபை பெருகும்" என்று வாதிட்டனர். இதற்குப் பவுல், "பாவத்துக்கு மரித்த நாம் இனி அதிலே எப்படிப் பிழைப்போம்?" என்ற கேள்வியைக் கொண்டு பதில் அளித்தார் (ரோமர் 6:2). தன்னையே சேவித்துக் கொள்வதற்குச் சாக்குப் போக்காகவே சுயாதீனம் உள்ளது என்று உறுதிப்படுத்தச் சாயும் கிறிஸ்தவருக்கு, பவுல் ஒரு கேள்வியைக் கொண்டிருந்தார்; பேதுரு ஒரு தடையைக் கொண்டிருந்தார். இவ்விருவருமே, சுயாதீனத்தைச் செயல்படுத்துதல் என்பது, தேவனுக்கு முற்றிலுமாக சேவித்தலில் கீழ்ப்படிதலின் கட்டுப்பாடுகளுக்குள் வருகிறது என்று ஒப்புக் கொண்டனர்.

**வசனம் 17.** ஒரு நல்ல போதகராக இருந்தார் என்ற வகையில் பேதுரு, நான்கு கட்டளைக் கொண்டு இவ்வசனப் பகுதியைத்தொகுத்துரைத்தார்: கனம் பண்ணுங்கள், அன்புகூருங்கள், பயந்திருங்கள், கனம்பண்ணுங்கள். வினைச் சொற்களின் காலத்தில் உள்ள வினோதமான மாறுதலை ஆங்கில வாசகர் இழந்து போயிருந்தார். ஒருமுறை மாத்திரமே வரும் வினைச்சொல் கட்டளை ஒன்றைப் பயன்படுத்தி, அதைத் தொடர்ந்து மூன்று நிகழ்காலக் கட்டளைகளை அப்போஸ்தலர் இங்கு உரைத்தார். இந்த மாற்றத்திற்கு

ஏதாவது தனிச்சிறப்பு உள்ளதா இல்லையா என்பதே இங்கு கேள்வியாக இருக்கிறது. காலத்தில் மாற்றம் என்பது அர்த்தத்திற்கு ஏதேனும் பங்களிக்கிறதா? அப்படிப் பங்களிக்கிறது என்றால், அந்த மாற்றம் மொழிபெயர்ப்பில் பிரதிபலிக்கப்பட வேண்டுமே.

மொழிபெயர்ப்பாளர்கள், ஆங்கில வார்த்தைகளைத் தாங்கள் தேர்ந்து கொள்வதினால் மாத்திரம் அல்ல, ஆனால் தாங்கள் தேர்ந்துகொள்ளும் நிறுத்தற்குறிகளினாலும், மூலமொழியின் விளக்கத்தைத் தெரியப்படுத்துகின்றனர். KJV வேதாகமம் கட்டளைகளை இணையாக மொழிபெயர்க்கிறது. மொழிபெயர்ப்பாளர்கள், காலத்தின் மாற்றத்தில் கொஞ்சமே தனிச்சிறப்பைக் கண்டனர் அல்லது தனிசிறப்பு எதையும் அவர்கள் காணவே இல்லை. NASB, NRSV வேதாகமங்களும் இதையே செய்துள்ளன. இருப்பினும் NIV வேதாகமம், "எல்லாரையும் கனம்பண்ணுங்கள்: சகோதரரிடத்தில் அன்புகூருங்கள், தேவனுக்குப் பயந்திருங்கள்; ராஜாவைக் கனம்பண்ணுங்கள்" என்று மொழிபெயர்த்துள்ளது. REB வேதாகமமும் இதேபோன்று செய்துள்ளது. இந்தப் பிந்திய மொழிபெயர்ப்புகள், முதல் வினைச்சொல்லின் ஒருமுறை மாத்திரம் வரும் தன்மையானது, பின்தொடரும் மூன்று கட்டளைகளுக்கும் ஒரு தொகுப்புரையாக உள்ளது என்பதைப் புரிந்துகொண்டுள்ளன. இவ்வாறாக, "எல்லா மனிதரையும் கனம் பண்ணுங்கள். குறிப்பாக சகோதரரை அன்பு செய்தல், தேவனுக்குப் பயந்திருத்தல், மற்றும் இராஜாவைக் கனம்பண்ணுதல் ஆகியவற்றின் மூலமாக எல்லாரையும் கனம் பண்ணுங்கள் என்று திட்டவட்டமாக நான் அர்த்தப்படுத்துகிறேன்" என்பதே இங்கு கருத்தாக உள்ளது. இந்த மொழிபெயர்ப்பை ஆதரிக்கும் வகையில் "கனம் பண்ணுங்கள்" என்ற வினைச்சொல் இரண்டு முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. ஒருமுறை பயன்படும் கட்டளைக்கும் நிகழ்காலக் கட்டளைக்கும் இடையில் உள்ள வேறுபாடு சிலவேளைகளில் அற்பமாக உள்ளது என்பது உண்மையே; இருப்பினும் இந்த இடத்தில், NIV வேதாகமத்தின் மொழிபெயர்ப்பு சற்றுக் சிறப்பானதாக உள்ளது. இருந்தபோதும், மாறுபாடான நிறுத்தற்குறியிடுதல் இந்த வாக்கியத்தின் அர்த்தத்தை அடிப்படையில் மாற்றுவதில்லை. எந்த விஷயத்திலும், கிறிஸ்தவர்கள் எல்லாரையும் கனம்பண்ணும்படி கூறப்படுகின்றனர்; ஆனால் கனம்பண்ணுதலுடன் கூடுதலாக, அவர்கள் கிறிஸ்துவுக்குள்ளான தங்கள் சகோதரர்களையும் சகோதரிகளையும் அன்புகூர வேண்டும்.

கட்டளைகள் தங்களுக்குள்ளேயே அர்த்தத்தில் வளமானவையாக உள்ளன. பழங்கால உலகம், நவீன உலகத்தைக் காட்டிலும் குறைவான அளவில் சுயமேட்டிமை உடையதாக இருக்கவில்லை. மக்களினம், மொழி, இனம் மற்றும் கலாச்சாரம் ஆகியவற்றின் எல்லைகள் பேதுருவின் புத்திமதியில் கரைந்து போகின்றன: எல்லாரையும் கனம்பண்ணுங்கள்.[8] தேவன் பட்சபாதம் உள்ளவரல்ல என்பதைப் பேதுரு, பல ஆண்டுகளுக்கு முன்பே கற்றிந்திருந்தார் (நடபடிகள் 10:34). பவுல், "யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை. அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை, ஆணென்றும் பெண்ணென்றுமில்லை; நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள்" என்று எழுதினார் (கலாத்தியர் 3:28). தேவன் "மனுஷஜாதியான சகல ஜனங்களையும் அவர் ஒரே இரத்தத்தினாலே

தோன்றப்பண்ணினார்" (நடபடிகள் 17:26) என்பதால், கனம்பண்ணுதல் என்பது எல்லாருக்கும் செலுத்த வேண்டிய கடமையாக உள்ளது. மக்கள் இனம், பால் அல்லது கலாச்சாரம் ஆகியவற்றின் காரணமாக மக்களை வகைப்படுத்துதல், சரீர அமைவு அல்லது ஊனம் ஆகியவற்றின் நிமித்தமாகப் பிரித்து வகைப்படுத்துதல் என்பது, "சகல ஜனங்களையும்" தோன்றப்பண்ணின தேவனைத் தமது தேவனாகக் கொண்டிருக்கும் எவரையும் கனவீனம் செய்தலாக உள்ளது.

எல்லா மக்களையும் கனம்பண்ண வேண்டும் என்று இயேசு தம்மைப் பின்பற்றுபவர்களுக்குப் போதித்திருக்கையில், அவர்கள் தங்களுடன் விசுவாசத்தைப் பகிர்ந்து கொள்கிறவர்களுக்குக் கனம் செய்தலைக் காட்டிலும் அதிகமானவற்றைச்செய்ய வேண்டும். அவர்கள் சகோதரரிடத்தில் அன்புகூர வேண்டும். பேதுரு இவ்விடத்திலும் 5:9லும் "சகோதரத்தும்" என்பதற்கான (*adelphotēs* என்ற) வார்த்தையைப் பயன்படுத்தினார். புதிய ஏற்பாட்டில் வேறு எவ்விடத்திலும் இவ்வார்த்தை காணப்படுவதில்லை. "சகோதரத்துவம்" என்பது நசரேயனாகிய இயேசுவே கிறிஸ்துவாக உள்ளார், அவர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரன் என்று பொதுவாக அறிக்கையிடுபவர்களாக உள்ளனர்.[9] 5:9ம் வசனம் தெளிவாக்குகிறபடி, இது ஒருவர் உறுப்பினராக உள்ள உள்ளூர் சபைக்கும் அதிகமானதை அர்த்தப்படுத்துகிறார். உலகளாவிய வகையில் கிறிஸ்துவின் சபைகள் விசுவாசிகளின் ஐக்கியமாக உள்ளனர் (ரோமர் 16:16). அன்பு எல்லாருக்கும் விவரிவாக்கப்பட்டுள்ளது. விசுவாசிகளுக்கு இடையிலான அன்பின் தனிச்சிறந்த பிணைப்பு என்பது புதிய ஏற்பாட்டில் அடிக்கடி அக்கறைக்கு உரிய விஷயமாக உள்ளது. பேதுரு கூறிய "எல்லாரையும் கனம்பண்ணுங்கள்; சகோதரரிடத்தில் அன்புகூருங்கள்" என்பதற்கு இணையாகப் பவுல் கூறிய "ஆகையால் நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக, யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும், நன்மைசெய்யக்கடவோம்" என்பது உள்ளது (கலாத்தியர் 6:10). இயேசு, "நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள்" என்று கூறியிருந்தார் (யோவான் 13:35).

முதல் இரண்டு கட்டளைகளைப் போன்று, கடைசி இரண்டு கட்டளைகள் நெருக்கமான பிணைப்புக் கொண்டுள்ளன. விசுவாசி தேவனுக்குப் பயந்திருக்க வேண்டும் மற்றும் அவர் ராஜாவைக் கனம்பண்ண வேண்டும். தேவன் மீது அன்புகூருதல் என்பதே எல்லாக்கட்டளைகளிலும் மிகப்பெரியது என்று இயேசு கூறினார் (மாற்கு 12:28-30). அன்பு மற்றும் பயம் ஆகியவற்றிற்கு இடையில் சற்றே இறுக்கம் உள்ளது, ஆனால் அவைகள் பரஸ்பரம் தனிப்பட்டவைகள் அல்ல, மற்றும் அவை நிச்சயமாக எதிரானவை அல்ல. "பயம்" என்பது பல பக்கங்கள் கொண்ட வார்த்தையாக உள்ளது. ஒரு விளக்கத்தின்படி "பயம்" என்பது முடமாக்கும் வார்த்தையாக உள்ளது. ஒரு தலாந்தைப் பெற்ற மனிதன் பின்வரும் நொண்டிச் சாக்கைக் கூறினான்: "ஆகையால், நான் பயந்து, போய், உமது தலாந்தை நிலத்தில் புதைத்து வைத்தேன்" (மத்தேயு 25:25). யோவானும் இவ்வார்த்தையே இதே கருத்தில் பயன்படுத்தினார். "அன்பிலே பயமில்லை, பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும்; பயமானது வேதனையுள்ளது, பயப்படுகிறவன் அன்பில் பூரணப்பட்டவன் அல்ல" (1 யோவான் 4:18).

தேவன் கையாளும் பெரிய தடியின் மீதுள்ள பயத்தினால் மாத்திரம் கீழ்ப்படியும் ஆத்துமாவானது, சிறியளவே திருப்தியைக் கண்டறியும், எனவே அது தனது கிறிஸ்தவத்தில் நிலைத்திருக்கச் சிறிதளவே பலம் கொண்டிருக்கும்.

இன்னொரு விளக்கத்தின்படி, "பயம்" என்பது, படைத்தவரை முகமுகமாய்ப் காண்பதில் மனிகுலத்தின் நிச்சயமற்ற, மாறக்கூடிய நிலைப்பாடு என்பதாக உள்ளது. தேவனுக்குப் பயப்படுதல் என்பது அவருக்கு முன்னால் நிச்சயமற்ற தன்மையோடு, தாழ்ந்த தலையோடு, திக்கிப்பேசும் நாவோடு வருதலாக உள்ளது. அது தேவனிடத்தில் விவாதங்களையும் விளக்கங்களையும் அளிப்பதாக அல்ல, ஆனால் தேவனிடத்தில் வேண்டுகோள் விடுப்பதாக உள்ளது. "கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்" என்று ஞானவான் கூறினார் (நீதிமொழிகள் 1:7). தேவனுக்குப் பயப்படுதல் என்பது நள்ளிரவில் ஆகாயத்தை உற்றுநோக்குதல் அல்லது ஒருவர் தமது சுய இருதயத்திற்குள் கண்ணோக்குதல் என்பதைத் துணையாகக் கொண்ட, அறியாமை மற்றம் நிச்சயமற்ற தன்மை ஆகியவற்றின் பயங்கர உணர்வாக உள்ளது. பயம் என்பது தாழ்மையுடன் நெருக்கமான பிணைப்புக் கொண்டுள்ளது. அது முரட்டுத்தனம் மற்றும் சுய-விருப்பம் ஆகியவற்றிற்கு எதிரானதாக உள்ளது. ஏசாயா தேவனைச் சந்தித்தபோது, பயம் அவரை [ஏசாயாவை] மேற்கொண்டது. "ஐயோ! அதமானேன், நான் அசுத்த உதடுகளுள்ள மனுஷன், அசுத்த உதடுகளுள்ள ஜனங்களின் நடுவில் வாசமாயிருக்கிறவன்; சேனைகளின் கர்த்தராகிய ராஜாவை என் கண்கள் கண்டதே" (ஏசாயா 6:5). தேவன் இரக்கம் உள்ளவராக இருந்தார் "அவர் உன்னைக் கைவிடவுமாட்டார்" (உபாகமம் 4:31), மற்றும் அவர் "பட்சிக்கிற அக்கினி"யாக இருந்தார் என்பதை இஸ்ரவேல் மக்கள் அறிய வேண்டும் என்று மோசே விரும்பினார் (உபாகமம் 4:24). விசுவாசி தேவனுடைய அன்பையும் அவருடைய கிருபையையும் தவறாக யூகித்துக் கொள்ளத் துணியக்கூடாது. கிறிஸ்தவர்கள் "கிருபை பெருகும்படிக்குப் பாவத்திலே நிலைநிற்கலாம் என்று" துணியக்கூடாது (ரோமர் 6:1). பேதுருவின் வாசகர்கள் "தேவனுக்குப் பயந்திரு" க்க வேண்டும் என்று அவர் கூறினார்.

"ராஜாவைக் கனம்பண்ணுங்கள்" என்ற கடைசிக் கட்டளையினால் பேதுரு 2:13ல் தொடங்கிய புத்திமதியை முடித்து வைத்தார். கிறிஸ்தவர்கள் இராஜாவுக்குக் கீழ்ப்படிவது மாத்திரமின்றி, அவர்கள் அவரைக் கனம்பண்ணவும் வேண்டும். இருப்பினும் அப்போஸ்தலர் அப்போதுதான், கனம் பண்ணுதல் என்பது எல்லாமக்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய கடனாக இருந்தது என்பதைத் தெளிவாக்கி இருந்தார். இராஜாவுக்குச் செலுத்தப்பட வேண்டிய கனம் என்பது சமரசம் செய்யப்படாதிருத்தல், குறைந்தபட்சம் தகுதியுடையதாக இருந்தது. முதல் மற்றும் இரண்டாம் நூற்றாண்டுகளில் ஆசியா மைனர் பகுதியில் நடப்பட்டிருந்த கிரேக்கக் கல்வெட்டுகள் ரோம இராஜாக்களுக்கு முழுமையான தெய்வீக கனத்தைக் கொடுக்கின்றன. அவர் கடவுளாக, இரட்சகராக மற்றும் சர்வ வல்லவராக இருந்தார். பேதுருவைப் பொறுத்த மட்டில், இராஜா கனத்திற்கு உரியவராக இருந்தார், ஆனால் ஆராதனைக்கோ வழிபாட்டிற்கோ உரியவராக இருக்கவில்லை. மற்றும் தேவனுக்கு ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள பயத்திற்கு இராஜா உரியவரல்ல. பேதுரு தமது வாசகர்களுக்கு, குடிமை அதிகாரத்துடன்

அவர்களுக்குள்ள உறவு பற்றி இரகசியமாகவும் திறமைநிறைந்த வகையிலும் அறிவுறுத்தினார். ஆளும் ஆட்சியாளர்களுக்கு அவர்கள் கீழ்ப்படியவும் கனம் பண்ணவும் வேண்டும், ஆனால் அவர்களுக்கு அஞ்சத்தேவையில்லை. கிறிஸ்தவர்கள் தேவனுக்குப் பயப்படும் அதே வகையில் ஆட்சியாளர்களுக்குப் பயப்படுவதில்லை.

## எஜமானர்களுக்குக் கீழ்ப்படிதல் (2:18-20)

**[18]வேலைக்காரரே, அதிக பயத்துடனே உங்கள் எஜமான்களுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; நல்லவர்களுக்கும் சாந்தகுணமுள்ளவர்களுக்கும் மாத்திரம் அல்ல, முரட்டுக்குணமுள்ளவர்களும் கீழ்ப்படிந்திருங்கள். [19]ஏனெனில், தேவன் மேல் பற்றுதலாயிருக்கிற மனச்சாட்சியினிமித்தம் ஒருவன் அநியாயமாய்ப் பாடுபட்டு உபத்திரவங்களைப் பொறுமையாய்ச் சகித்தால், அதுவே பிரீதியாயிருக்கும். [20]நீங்கள் குற்றஞ்செய்து அடிக்கப்படும்போது பொறுமையோடே சகித்தால், அதினால் என்ன கீர்த்தியுண்டு? நீங்கள் நன்மைசெய்து பாடுபடும்போது பொறுமையோடே சகித்தால் அதுவே தேவனுக்குமுன்பாகப் பிரீதியாயிருக்கும்.**

ஸ்கோபி அவர்கள் "அடிமைத்தனப் பழக்கம் பற்றி [புதிய ஏற்பாடு]என்ன கூறுகிறது என்பது, பெருமளவில் அடிமைத்தனப் பழக்கத்தைச் சார்ந்திருந்த பொருளாதாரத்தைக் கொண்ட, கிரேக்க - ரோம உலகத்தின் பின்னணிக்கு எதிராக காணப்பட வேண்டும்" என்று உற்றுக்கவனித்துள்ளார்.[10] பேதுரு எழுதியபோது, கிறிஸ்தவர்கள் சிறிய அடக்கப்பட்ட சிறுபான்மையினராக இருந்தனர். அடிமைத்தனப் பழக்கம் கிறிஸ்துவின் போதனைக்கு எவ்வளவு எதிரிடையாக இருந்தாலும் அதை உலகில் இருந்து நீக்கிப்போடும் சக்தி எதுவும் அவர்களுக்கு இல்லாதிருந்தது. புதிய ஏற்பாட்டில், ஒருவர் அடிமைத்தனப் பழக்கத்துடன் எவ்வாறு வாழ்கிறார் என்பது கேள்வியாக உள்ளது, அதை ஒருவர் எவ்வாறு துடைத்து ஒழிக்கிறார் என்பது கேள்வியாக இருக்கவில்லை. தேவன் ஒவ்வொரு நபருக்கும் கண்ணியத்தையும் தகுதியையும் தருகிறார் என்பதே எப்போதும் பதிலாக இருந்துள்ளது. கிறிஸ்துவின் மரணம் எஜமானருக்கு எவ்வாறு பயன்படுகிறதோ அவ்வாறே அடிமைக்கும் பயன்படுகிறது.

**வசனம் 18.** அரசாங்கங்களிடத்தில் இருந்து கவனத்தைத் திருப்பிய பேதுரு, கீழ்ப்படிதல் என்ற கருத்தை, இன்னும் அதிகம் தனிப்பட்ட வகையிலான சமூக நிறுவனத்தின் சட்டகத்தினுள் அணுகினார்: வேலைக்காரரே, அதிக பயத்துடனே உங்கள் எஜமான்களுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்.[11] பேதுரு யாருக்கு எழுதினாரோ அந்த வாசகர்களில் சிலர் இயங்கும் உடமைப் பொருளாக இருந்தனர்; அவர்கள் மற்ற மனிதர்களால் உரிமைகொள்ளப் பட்டிருந்தனர். அடிமைத்தனப் பழக்கம் என்பது பழங்கால சமூகங்களில் வாழ்வின் வழியாக இருந்தது. அதன் ஒழுக்கத்தன்மை கேள்விகேட்கப்படாது சென்றது. ஒருவர், யுத்தத்தில் பிடிபட்டவர்கள் மத்தியில் இருக்கவோ அல்லது அவரது தாயார் அடிமையாக இருந்தார் என்றதாலோ, அடிமையாக ஆவதற்குப்

*போதிய அளவு துரதிர்ஷ்டசாலியாக இருந்த காரணத்தினால் அடிமையானார். அடிமைகளில் பலர் தமது உரிமையாளர் தம்மிடம் கோரும் வேலையின் மீதே சார்ந்திருந்தார். அடிமைகளில் மிகச்சிறிய எண்ணிக்கையானோர் உயர்ந்த திறன் கொண்டவர்களாக இருந்தனர். அவர்கள் தங்கள் உரிமையாளர்களின் குழந்தைகளுக்கு ஆசிரியர்கள் ஆகியிருக்கலாம் அல்லது வேறு பணிகளில் தங்கள் உரிமையாளர்களின் இல்லங்களில் சேவைசெய்து இருக்கலாம். போதிய அளவு தூரம் பராமரிக்கப்படும் வரையில், அவர்கள் தங்கள் உரிமையாளர்களுடன் நட்புறவின் ஒரு வகையைப் பகிர்ந்து கொள்ளலாம். சில அடிமைகள் நகரவைகளினால் உரிமைகொள்ளப் பட்டிருந்தனர். அவர்கள் செல்வாக்கு மிக்க பதவிகளுக்கு உயர்த்தப்படலாம், ஆனால் அந்த அடிமைகள் அசாதாரணமானவர்களாக/விதிவிலக்கானவர்களாக இருந்தனர். பெரும்பான்மையான அடிமைகள் அற்பமான முதுகை முறிக்கும் வேலைகளைக் கொண்டிருந்தனர். சுரங்கங்கள் அல்லது ஆலைகளில் வேலை செய்தவர்கள் ஒரு சில ஆண்டுகளுக்கு மேல் உயிர்வாழும்படி எதிர்பார்க்கப்படவில்லை. அவர்கள் பணிசெய்வதன் விலையின் பாகமாக இருந்தனர். அடிமைகள் மலிவானவர்களாயிருந்தனர். அவர்கள் ஒரு கழுதை அல்லது ஒரு வெள்ளாட்டைப்போன்று இடம் மாற்றப்படக் கூடியவர்களாக இருந்தனர்.*

*அடிமைகளுக்குப் பவுலின் அறிவுறுத்தலுடன் ஒப்பிடும்போது பேதுரு, எதிர்பாராத இரண்டு வார்த்தைகளைத் தேர்ந்து கொண்டார். (1) பவுல் "கட்டப்பட்ட அடிமைகள்" (douloi) என்ற மிகக் கடுமையான வார்த்தையை பயன்படுத்தியிருக்க (எபேசியர் 6:5; கொலோசெயர் 3:22), அவர்களைப் பேதுரு "ஊழியக்காரர்கள்" அல்லது "வீட்டு அடிமைகள்" (oiketai) என்று குறிப்பிட்டார். (2) பவுல் kurioi என்ற மென்மையான வார்த்தையை எஜமானர்களைக் குறிப்பதற்குப் பயன்படுத்தி இருக்கையில், பேதுரு "எஜமானர்கள்" என்ற கடினமான வார்த்தையை (despotai), பயன்படுத்தினார். இவற்றிற்கிடையே உள்ள வேறுபாடு மிகப் பெரிதாக இராவிட்டாலும், மிகாயேல்ஸ் அவர்கள் செய்துள்ளபடி, இலக்கிய அடிப்படையில் மாத்திரம்,[12] பேதுரு வார்த்தைகளைத் தேர்ந்தெடுத்த தன்மை ஒதுக்கிட ஆபத்து நிறைந்ததாக உள்ளது. வார்த்தைகளைப் பேதுரு தேர்ந்தெடுத்த விதம் ஒரு கேள்வியை எழுப்புகிறது. அவர் "கட்டப்பட்ட அடிமைகளுக்கு" (douloi) மாறுபட்ட வகையில் அறிவுரை வழங்கி இருப்பார?*

*கிரேக்க - ரோம உலகத்தில் அடிமைத்தனப் பழக்கத்தை, சுமாரான அளவில் தயையுள்ள நிறுவனம்[13] என்று சித்தரிக்க விரும்பியவர்கள், பழங்கால உலகில் வசதிவாய்ந்த எழுத்தாளர்கள் அடிமைத்தனப் பழக்கத்தைப் பற்றித் திரித்துக்கூறும் கண்ணோட்டம் கொண்டிருந்ததை உணர்தறியத் தவறுகின்றனர். செல்வந்தர்கள், வீட்டில் வேலை செய்த அடிமைகள், கணக்கர்கள், ஆசிரியர்கள் மற்றும் குடிமைப் பணியாட்கள் ஆகியோரிடத்தில் நட்புறவுடன் இணைந்திருந்தனர். அவர்களின் எழுதப்பட்ட பதிவேடுகள், நவீன காலத்து கணக்கு நிறுவனம் ஒன்றில் அந்த அடிமை வேலை செய்தல் போன்ற மனப்பதிவை விட்டுச் செல்கின்றன. விஷயம் அப்படி இருக்கவில்லை. அடிமைகளாக ஆனவர்களில் பெரும்பான்மையானவர்கள் தனித்திறன் எதுவும் கொண்டிருக்கவில்லை. பழங்காலப் பதிவேடுகள், சாதாரண அடிமை*

களின் வாழ்வு பற்றிய அவ்வப்போதய சிறு துணுக்குகளைத் தருகின்றன, ஆனால் ஆலைகள் அல்லது சுரங்கங்களில் பணியமர்த்தப்பட்டவர்களுடன் மாபெரும் மனிதர்கள் சிறிதளவே தொடர்பு கொண்டிருந்தனர். அவர்கள் கால்நடைகளைப் போன்று இருந்தனர், ஒரு அடிமையின் மரணம் என்பது நிதிநிலையில் இழப்பு என்பதைத் தவிர அதிகமாக எதையும் அர்த்தப்படுத்தவில்லை. வீட்டில் வேலைசெய்த அடிமைகள்கூட, தாங்கள் வீட்டுக் கோட்டைத் தாண்டினால், ஆலைகளில் தங்கள் வாழ்வு முடியும் என்பதை அறிந்திருந்தனர். பழங்கால உலகத்தில் இருந்து வார்த்தைகளை நாம் பெறும், வசதிமிக்க ஆளும் வர்க்கம், பெரும்பாலான அடிமைகளுக்கு என்ன நடந்தது என்பதைப் பொதுவாக மற்றவர்கள் அறிய அனுமதிப்பதை விரும்பவில்லை.[14] பேதுரு, "வீட்டு வேலை செய்த அடிமைகளுக்கு" அறிவுறுத்தியதில் இருந்து மாறுபட்ட வகையில், "கட்டப்பட்ட அடிமைகளுக்கு" அறிவுரை கூறியிருக்கலாம், மிகவும் வெறுக்கத்தக்க பணிநிலைகளில் அவர்கள் இருந்தனர், அவர்கள் கொள்ளையடித்துச் செல்லப்பட, கொலை செய்யப்பட, அழிக்கப்பட உரிமை இருந்தது, ஆனால் அவர்கள் மதிப்பு நிறைந்த கீழ்ப்படிதலை அளிக்க வேண்டும் என்று வேண்டிக் கேட்டுக் கொள்வது அதிக கடினமாக இருந்திருக்கும்.

NASB வேதாகமம் respect என்று மொழிபெயர்த்துள்ள (*phobos* என்ற)வார்த்தை 2:17ல் "*பயம்*" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வினைச்சொல்லின் பெயர்ச்சொல் வடிவமாக உள்ளது; அவ்வசனம் "தேவனுக்குப் பயந்திருங்கள்" என்று கூறுகிறது. அடிமைகள் தங்கள் எஜமானர்களை, தாங்கள் தேவனை மதித்தது போன்றே மதிக்க வேண்டும் என்று பேதுரு மறைவாக உணர்த்தியிருப்பார் என்பது அரிதான விஷயமாகும். இருப்பினும் இவ்வார்த்தையை "respect" என்று மொழிபெயர்த்தால் அது பலவீனமானதாகவே உள்ளது. அடிமையின் பணிநிலையானது மரியாதை செலுத்துதல் என்பதை விட அதிகமானவற்றைச் செய்யும்படி எதிர்பார்க்கப்பட்டது. எஜமானர்களுக்கும் அரசாங்கங்களுக்கும் கீழ்ப்படிதல் என்பது "கர்த்தர் நிமித்தம்" செய்ய வேண்டியவையாக இருந்தன (2:13), அடிமைகள் தேவனுக்குப் பயந்ததன் காரணமாகக் கீழ்ப்படிந்திருக்க வேண்டும் என்று பேதுரு அர்த்தப்படுத்தியிருக்க வாய்ப்பில்லை. மாறாக அவர், அடிமைகளுக்கு அவர்களின் நிச்சயமற்ற நிலைப்பாட்டை நினைவூட்டினார் எனலாம். கீழ்ப்படிதலுக்குக் குறைவான எதுவும் சுய-தோல்வியடையச் செய்தலாக இருக்கும். அவர்கள் உதவியற்றிருந்தனர். அடிமைகள் தங்கள் மதிப்பைத் தகுதிப்படுத்தும் எஜமானர்களைத் தேர்ந்து தெரிந்து கொள்ள இயலாதிருந்தனர். அவர்களின் பயம்நிறைந்த நிலைப்பாட்டின் காரணமாக, அவர்கள் நல்லவர்களுக்கும் சாந்தகுணமுள்ளவர்களுக்கும் மாத்திரம் அல்ல, முரட்டுக்குணமுள்ளவர்களுக்கும் கீழ்படிந்திருக்க வேண்டியிருந்தது.

**வசனம் 19.** பேதுரு ஏற்கனவே கீழ்ப்படிதலை சுதந்தரத்துடன் பிணைத்திருந்தார் (2:13, 16). சுதந்தரம் என்பது அடிமைகளாகக் கீழ்ப்படிந்திருந்தவர்களுக்கு அர்த்தம் எதையேனும் கொண்டுள்ளதா? ஒருவேளை சுதந்தரத்தை, தயவு (*charis*) என்னும் நுண்ணோக்கி வழியாகக் கண்ணோக்க முடியும் என்றால் அது அவ்வாறு எதையேனும் கொண்டிருக்கும் எனலாம். அடிமைகள் பயத்தின் காரணமாகக் கீழ்ப்படிய வேண்டியிருந்தனர்

என்று எடுத்துக் கொள்ளலாம், ஆனால் அவர்களின் பயம் நிறைந்த நிலையானது, அவர்கள் தங்கள் சகோதரர்கள் மற்றும் சகோதரிகளுடன் தங்கள் சிந்தையைத் தேவன் மீது ஒட்டவைக்கும் அளவிற்கு, நம்பிக்கை ம ற்றும் சமாதானம் ("தயவு" என்ற வார்த்தையில் இவையாவும் மறைமுகமாக உணர்த்தப்படுகிறது) ஆகியவற்றைக் கொண்டு மாற்றப்பட முடியும். பவுல் *charis* என்ற வார்த்தையை எடுத்து கிறிஸ்தவ விசுவாசத்தின் மிகவும் தனிச்சிறந்த போதனைகளில் ஒன்றாக அதை மாற்றினார். இதுவே பவுலின் நிருபங்கள் முழுவதிலும் "grace" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தையாக இருக்கிறது. பேதுரு இதை, தம்மைச் சுற்றி இருந்த உலகம் முழுவதிலும் பயன்படுத்தும் வகையிலேயே பயன்படுத்தினார். அவர்களைத் தவறாக நடத்துதல் பற்றிக் கவனம் குவிப்பதற்குப் பதிலாக, அவர்கள் தேவன் மீது கவனம் குவிக்க வேண்டியவர்களாக இருந்தனர் என்பதால், அது அடிமைகளின் மீதான தயவை மீளவும் கட்டும் என்று அப்போஸ்தலர் உறுதிப்படுத்தினார். விசுவாசம் நிறைந்த ஒரு சமூகத்தில், அவர்கள் சுதந்தர மனிதர்கள் போலத் தங்களைத் தேவனுக்கு மனப்பூர்வமாக ஒப்புக்கொடுக்க வேண்டும். இப்போது *charis* என்ற முகமூடியில் உள்ள சுதந்தரம் என்பது, அவர்களின் போராட்டங்கள் வழியே அவர்களைக் கண்டது.

அடிமைகளிடம் இருக்க வேண்டும் என்று பேதுரு வற்புறுத்திய கீழ்ப்படிதல், தேவன்மேல் பற்றுதலாயிருக்கிற மனச்சாட்சியினிமித்தம் இருக்க வேண்டியதாகும். "மனச்சாட்சி" *(suneidēsis)* என்ற வார்த்தையைப் பேதுரு இந்த நிருபத்தில் மூன்று முறைகள் பயன்படுத்தினார். மற்ற இரு இடங்களில் (3:16, 21), இது "நல்" என்ற வார்த்தையுடன் இணைந்துள்ளது மற்றும் சிறிதளவே சிரமத்தை முன்வைக்கிறது. இவ்வசனத்தில் "மனச்சாட்சி" என்பதன் அர்த்தம் குறைவாகவே தெளிவாக உள்ளது. நேர்ப்பொருளில் இதை மொழிபெயர்த்தால், "தேவனுடைய மனச்சாட்சி" *(suneidēsin theou)* என்றே வருகிறது. "தேவனுடைய" என்ற ஆறாம் வேற்றுமை உருபு கடினமாக உள்ளது. தேவனுடைய சொந்த மனச்சாட்சியினிமித்தம் அடிமைகள் கீழ்ப்படிய வேண்டும் என்று பேதுரு கூறியிருக்க மாட்டார் என்பது தெளிவு. *Suneid.. sis* என்ற வார்த்தை "மனச்சாட்சி" என்பதற்குரிய ஆங்கில வார்த்தையுடன் மிகச்சரியாக ஒன்றியிருப்பதில்லை. இது பகிர்ந்து கொள்ளப்பட்ட அறிவு என்ற கருத்தைச் சுமந்து வருகிறது. இந்த சந்தர்ப்பப்பொருளில், இது கிறிஸ்துவின்மீது விசுவாசத்தை வைத்த அடிமைகளுக்கும் அவர்களைப் போன்ற ம ற்றவர்ளுக்கும் இடையில் பகிர்ந்துகொள்ளப்பட்ட அறிவு என்பதாக உள்ளது. தேவனே பகிர்ந்து கொள்ளப்பட்ட அறிவின் கருப்பொருளாக இருக்கிறார். எனவே அடிமைகள் தங்கள் "பகிர்ந்து கொள்ளப்பட்ட தேவனு டைய மனச்சாட்சியின்" நிமித்தம் கீழ்ப்படிய வேண்டும்.[15] J. N. D. கெல்லி அவர்கள் இதை "அவரும் அவரது சக கிறிஸ்தவர்களும் தேவனுடைய பரிசுத்த மக்கள் என்ற வகையில் பகிர்ந்து கொள்ளும் தேவனுடைய அறிவினிமித்தம்" என்று பொழிப்புரை செய்தார்.[16] NIV வேதாகமம் இதை, "தேவனுடைய மனச்சாட்சியினிமித்தம்" என்று மொழிபெயர்க்கிறது, இது அதே கருத்தி ற்கு நெருக்கமாக உள்ளது. பேதுருவின் வாசகர்கள் பகிர்ந்து கொண்ட தேவனுடைய மனச்சாட்சியினிமித்தம், ஒருவன் அநியாயமாய்ப் பாடுபட்டு உபத்திரவங்களைப் பொறுமையாய்ச் சகித்தால், அதுவே பிரீதியாயிருக்கும்.

*வசனம் 20.* பேதுரு for what credit is there, என்ற தமது சொல்லாடற்கலையின் கேள்வியைத் தொடங்கியபோது, அவர் முந்திய வசனத்தில் சிந்தனையைத் தொடர்ந்தார். "கீர்த்தி" மற்றும் "சாதகம்" ஆகியவை இணையான கருத்துக்களாக உள்ளன. "what credit is there," என்பது "அதினால் என்ன சாதகம் உண்டு?" என்பதற்குச் சமமாக உள்ளது. இந்தக் கேள்வி தனது பதிலைத் தானே அளிக்கிறது. ஒன்றுமே இல்லை. இதே வார்த்தையை NASB வேதாகமம், லூக்கா 6:32ல் "பலன்" என்று மொழிபெயர்க்கிறது. "உங்களைச் சிநேகிக்கிறவர்களையே நீங்கள் சிநேகித்தால். உங்களுக்குப் பலன் என்ன?" மற்றும் இது 1 பேதுரு 2:20ல் "கீர்த்தி" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. தேவன் ஒரு வரவு செலவு கணக்கேட்டைப் பராமரித்து, அதில் ஒவ்வொரு நற்செயலையும் ஒவ்வொரு தீயசெயலையும் சரியாகப் பதிவு செய்கிறார் என்று இங்கு கருத்து எதுவும் இருப்பதில்லை, மாறாக, அடிமைகளாக இருந்தாலும் மற்றபடி இருந்தாலும், மக்கள் தாங்கள் பெறத்தகுதியான தண்டனையாக அடிக்கப்படும்போது - அவர்கள் அந்த மோசமான தண்டனையைப் பொறுமையோடே சகித்தாலும் - அது தேவனுக்குப் பிரியமாயிருக்காது. விளைவு எதுவாக இருந்தாலும், தேவன் பாவத்தினால் கனப்படுத்தப்படுவதில்லை.

பேதுரு விசுவாசிகளிடம் இருந்து, அற்பமான அடிமைகளிடம் இருந்தும்கூட, மிக உயர்வான ஒழுக்க மற்றும் ஒழுக்க நெறியின் நடத்தையை எதிர்பார்த்தார். ஒருவர் சகிக்கும் தண்டனைக்கு அவர் பாத்திரரா இல்லையா என்பது பிரச்சனையல்ல. சரியானதைச் செய்தல் என்பதே இங்கு கருத்தாக உள்ளது. பாவம் தேவனுக்குக் கீர்த்தியை ஏற்படுத்துவதில்லை, அதில் அவர் பிரீதியாக இருப்பதில்லை. சரியானதைச் செய்தல், கர்த்தருக்குக் கீழ்ப்படிதல், அதற்காகத் துன்புறுதல் மற்றும் அதன்பின்பு பொறுமையோடே சகிப்பதற்கான விசுவாசம் கொண்டிருத்தல் ஆகியவையே தேவனுக்குப் பிரீதியாக உள்ளன. 2:19ஐத் தொடங்கப் பயன்படுத்திய அதே வார்த்தையைக் கொண்டு பேதுரு 2:20 நிறைவு செய்தார். ஒருவர் "நன்மைசெய்து பாடுபடும்போது" அதைப் பொறுமையோடே சகித்தால் அதுவே தேவனுக்குமுன்பாகப் பிரீதியாயிருக்கும் (2:20).

கீழ்ப்படிதலுக்கான வேண்டுகோள், விசுவாசிகளுக்கு முக்கியமானவையாக உள்ள மற்ற குறிக்கோள்களை அடைவதற்குத் துணைக்கருவியாக உள்ளது. கிறிஸ்தவர்கள் கீழ்ப்படிதல் உள்ளவர்களாக இருக்கும்போது, அவர்கள் சமாதானம் நிறைந்த மற்றும் ஒழுங்கு முறையான சமூகம் நிலவப் பங்களிக்கின்றனர். "சந்திப்பின் நாளிலே" (2:12) தங்கள் நம்பிக்கையை நிலைநிறுத்தியவர்களாக, உலகத்தின் நகரங்களில் தற்காலிகக் குடிகள் என்ற வகையில் தங்கள் நிலையை உணர்ந்து அறிகின்றனர். அதிகாரம் உள்ளவர்களைக் கீழ்ப்படிதலுடன் மதித்தல் என்பது, அவர்கள் தங்கள் அயலகத்தவர்களுடன் சமாதானமாக வாழவும் தேவனுடைய மகிமையைத் திரும்பக் கட்டவும் பங்களிக்கும். இருப்பினும் அரசாங்கத்திற்குக் கீழ்ப்படிதல் என்பது அடிமைகள் கீழ்ப்படியும்படி கேட்டுக்கொள்ளப்பட்ட அதே ஒழுங்கு முறைமையாக இருப்பதில்லை. அடிமைகள் அநீதியான மற்றும் கொடுமையான தண்டனைக்கு எளிதில் ஆட்படுபவர்களாக இருந்தனர். தண்டனை நீதியானதோ அல்லது அநீதியானதோ எப்படி இருந்தாலும்,

*“கடுமையாகத் தண்டிக்கப்படுதல்” என்பது அடிமைகளுக்கு வழக்கமற்றதாக இருக்கவில்லை. பேதுரு பயன்படுத்திய kolaphizō என்ற வினைச்சொல் புதிய ஏற்பாட்டில் மற்றும் உலக இலக்கியத்தில் ஒரு அரிதான வார்த்தையாக உள்ளது. இது இயேசு சிலுவையில் அறையப்படுவதற்கு முன்னர் அவருக்குத் தரப்பட்ட அடிகளைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்ட வார்த்தையாக உள்ளது (மத்தேயு 26:67; மாற்கு 14:65). அடிமைகளின் எளிதில் தண்டனைக்கு ஆட்படும் தன்மை, குற்றமற்ற நிலையில் தண்டனை பெறுவதில் அவரது ஏற்புத்தன்மை ஆகியவை, சிலுவையின் திசைநோக்கிப் பேதுருவின் சிந்தனையை வழிநடத்தின.*

## *சிலுவையின் மீது இயேசுவின் கீழ்ப்படிதல் (2:12-25)*

***21இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்; ஏனெனில் கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்துவரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப்போனார். 22அவர் பாவஞ்செய்யவில்லை, அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை. 23அவர் வையப்படும்போது பதில் வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்புச்செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார். 24நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர்தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்; அவருடைய தழும்புகளால் குணமானீர்கள். 25சிதறுண்ட ஆடுகளைப்போலிருந்தீர்கள்; இப்பொழுதோ உங்கள் ஆத்துமாக்களுக்கு மேய்ப்பரும் கண்காணியுமானவரிடத்தில் திருப்பப்பட்டிருக்கிறீர்கள்.***

*அடிமைகள் எஜமானர்களுக்குக் கீழ்ப்படிந்து இருக்க வேண்டும், அவசியம் நேர்ந்தால் அநீதியாகத் துன்புறவும் வேண்டும் என்ற புத்திமதி (2:18-20), கிறிஸ்தவ உபதேசங்கள் எல்லாவற்றிலும் மிகவும் விலையேறப் பெற்றதும், கிறிஸ்துவின் பாவநிவாரணப்பலி செலுத்துதலுமான, புதிய ஏற்பாட்டில் உள்ள மிகவும் நன்மையுடைய உபதேசம் ஒன்றிற்கு வழிநடத்துகிறது (2:21-25). தேவனுக்கும் மனிதருக்கும் இடையில் ஒப்புரவாக்குதலைக் கொண்டு வந்த சிலுவையைப் பற்றிய குறிப்பான எந்தக் கோட்பாட்டையும் பேதுரு மேம்படுத்தாது இருக்கையில், இயேசுவின் மரணம் மனித பாவத்தைச் சுமக்கும் வகையிலானதாக இருந்தது என்பதை அவர் தெளிவாக்கினார்.*

***வசனம் 21.** இந்த நிருபத்தில் தமது வாசகர்களுக்கு விடுக்கப்பட்ட அழைப்பைப் பலமுறை நினைவூட்டினார். 2:9ல் அவர்கள் இருளில் இருந்து வெளிச்சத்திற்கு அழைக்கப்பட்டனர், 3:9ல் அவர்கள் தங்களை சபித்தவர்களுக்கு ஆசீர்வாதத்தை திரும்பக்கூறும்படி அழைக்கப்பட்டனர், 5:10ல் அவர்கள் நித்திய மகிமைக்கென்று அழைக்கப்பட்டனர். இங்கு **இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்,** அதாவது நன்மை செய்து, கிறிஸ்துவைப் போன்று பாடுகளை பொறுமையோடு சகிப்பதற்கு அவர்கள் அழைக்கப்பட்டிருக்கின்றனர் (2:20). இந்த இடத்தில், அடிமைகள் என்பது துணைத்தலைப்பாக மாத்திரமே உள்ளது; இவ்வார்த்தைகள் எல்லாக் கிறிஸ்தவர்களுக்கும் உரியவையாகும். **கிறிஸ்துதாமே***

*அநீதியாகப் **பாடுபட்டார்** என்பதை ஒருவர் நினைக்கிறபோதுதான், அநீதியாக நடத்தப்படுதல் முன்னிலையில் கீழ்ப்படிதல் என்பது சகிக்கக் கூடியதாக இருக்கும். அடிமை தனது எஜமானருக்கு மேற்பட்டவர் அல்ல. மனிதர்கள் கர்த்தரை அநீதியாக நடத்தினர் என்றால், அவரைப் பின்பற்றுபவர்களையும் அவ்வாறே நடத்த வாய்ப்பு உள்ளது (மத்தேயு 10:24, 25). தேவன் மனிதராக இருத்தல் எப்படி இருக்கும் என்று ஒருக்காலும் அனுபவித்து இருக்கவில்லை என்பதால், மனிதர்களை நியாயந்தீர்க்கும் நிலைப்பாடு அவருக்கு இல்லை என்று யோபு முறையிட்டிருந்தார் (யோபு 10:4-6). இயேசு மனித மாம்ச ரூபத்தில் வந்தபோது, அந்த விவாதத்தை அமரப்பண்ணினார்.*

*கிறிஸ்து பாடுபட்டார் என்பது மட்டுமல்ல. அவர் உங்களுக்காகப் பாடுபட்டார் என்று பேதுரு கூறினார். பேதுரு இந்த நிருபத்தில் பிற்பகுதியில் (3:18) செய்தது போன்றே, பவுல்* "Christ died for you" *என்று அநேகமாக எழுதியிருப்பார் (ரோமர் 5:6; 1 கொரிந்தியர் 15:3). கிறிஸ்துவினிடத்தில் விசுவாசியை இழுக்கிற மற்றும் அவர் கிறிஸ்துவின் உதாரணத்தைப் பின்பற்ற வற்புறுத்துகிற விஷயங்களின் மத்தியில் நன்றியுணர்வு என்பது உள்ளது. பாவத்தினால் மனிதகுலம் கறைப்பட்டு அறியாமையினால் மூடப்பட்ட போது, தேவன் தமது இரக்கத்தில் நசரேயனாகிய இயேசு மூலமாகத் தமது படைப்பை வந்தடைந்தார். சிலுவை என்பது மனிதகுலத்தின் சார்பானதாக இருந்தது. இயேசு "உங்களுக்காகப் பாடுபட்டார்" என்பது, அவர் **உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப்போனார்** என்ற உரிமைகோருதலின் சட்டப்பூர்வமான கூற்றாக உள்ளது. இயேசுவின் பாடுகள் என்ற வகையில் அவரது மரணத்தைப் பற்றிப் பேசுதலானது, காலத்தினூடே "அவர் உங்களுக்காக மரித்தார்" என்ற வெறும் கூற்றைக்காட்டிலும் அதிகம் வரைவளைவையாகச் சிலுவை நிகழ்வுகளை விரிவாக உரைக்கிறது. கிறிஸ்து தம்மைப் பின்பற்றுபவர்களின் வாழ்வின்மீது கொண்டிருந்த உரிமைகோருதலைப் பேதுரு தெளிவாக்கினார். அந்த உரிமைகோருதல், எழுப்பும்படி அப்போஸ்தலர் எதிர்பார்த்த நன்றியுணர்வைக் கொண்டு மறுவலியூட்டப்படுகிறது.*

*எல்லா விஷயங்களிலும் கிறிஸ்தவ வாழ்விற்கு கிறிஸ்துவே மாதிரியாக இருக்கிறார் (மாற்கு 8:34; யோவான் 13:15; பிலிப்பியர் 2:5; 1 தெசலோனிக்கேயர் 1:6; எபிரெயர் 12:2; 1 யோவான் 2:6). மற்ற விஷயங்களுக்கு மத்தியில், அவரது பாடுகள் "ஒரு உதாரணமாக" உள்ளது, ஏனெனில் (1) அவர் சரியானவற்றைச் செய்ததால் பாடு அனுபவித்தார், மற்றும் (2) அவர் அதைப் பொறுமையாகச் சகித்தார். பாடு அனுபவித்தல் என்பது ஒருக்காலும் சந்தோஷமாக இருந்ததில்லை, ஆனால் கர்த்தர் பாடுபட்டதால், அவரது மக்கள் அவரது பங்கில் பங்கேற்க அழைக்கப்பட்டுள்ளனர். அவர் தமது மக்களுக்கு மாதிரியாக இருக்கிறார். திகைக்கச் செய்யும் ஒரு கூற்றில், "நான் உங்கள்நிமித்தம் அனுபவிக்கிற பாடுகளில் சந்தோஷமடைந்து, கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை அவருடைய சரீரமாகிய சபைக்காக, என் மாம்சத்திலே நிறைவேற்றுகிறேன்" என்று பவுல் எழுதினார் (கொலோசெயர் 1:24). பாடு அனுபவித்தல் என்பது கிறிஸ்துவை ஆண்டவராக உரிமையாக்குதலின் எதிர்பார்ப்பாகவும் அத்தியாவசியமான விளைவாகவும்*

உள்ளது என்று அப்போஸ்தலர் நம்பினார்.

விசுவாசிகள் **கிறிஸ்துவின் அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி** அவர் ஒரு மாதிரியை வைத்துப் போனார் என்று பேதுரு கூறியபோது, அவர் குறைவான வலியுறுத்தம் தரவில்லை. புதிய ஏற்பாடு முழுவதிலும் பார்க்கும்போது இங்கு மாத்திரமே காணப்படக்கூடிய, "மாதிரி" என்று மொழிபெயர்க்கப்பட்ட (*hupogrammos* என்ற) வண்ணமிகு வார்த்தை ஒன்றைப் பேதுரு பயன்படுத்தினார். இவ்வார்த்தையானது, ஒரு குழந்தை தனது எழுத்துக்களைப் பென்சிலில் படியெடுக்கும் வேலையை, வேதனையுடனும் விருவிருப்புடனும் செய்தலைக் கருத்தாகத் தெரிவிக்கிறது. அந்தக் குழந்தை மறு உருவாக்கியது *hupogrammos* ஆக அல்லது படியெடுக்கும் மாதிரியாக இருந்தது. பாடு அனுபவித்தல் என்பது கிறிஸ்தவ வாழ்வில் உள்ளாக இருக்கும் விஷயம் என்ற கருத்து, பேதுருவின் நிருபத்தைத் தொடர்ந்து வந்த பத்தாண்டுகளில் இன்னும் அதிக வலியுறுத்தம் பெற்றது. பேதுரு தமது இந்த நிருபத்தை எழுதி அரை நூற்றாண்டுக்குப் பின்னர், அந்தியோகியா நகரைச் சேர்ந்த இக்னேஷியஸ் என்பவர், "நாம் கர்த்தரைப் போலச் செய்பவர்களாக இருப்போமாக, மற்றும் அதிகம் தவறாக உபத்திரவப்படுதலை நாடுவோமாக, மிகவும் கைவிடப்பட்ட நிலையில் இருப்பதை, மிகவும் வெறுக்கப்படுவதை நாடுவோமாக" என்று வேண்டுகோள் விடுத்தார்.[17]

**வசனம் 22. பாவம் செய்யாதவர்** பற்றிய வார்த்தைகளை ஏசாயா 53:9ல் இருந்து பேதுரு குறிப்பிட்டுக் காண்பித்திருந்தபோதிலும், அவர் தமது வாசகர்களுக்குத் தாம் குறிப்பிட்ட அந்தத் தீர்க்கதரிசிகள் பெயரைக் கூற வேண்டிய அவசியம் எதையும் அவர் உணரவில்லை என்பது உறுதி. வரவிருந்த மீட்பர் பற்றி இஸ்ரவேலுக்குத் தேவன் ஏற்படுத்தியிருந்த வாக்குத்தத்தங்கள் பற்றிய கிறிஸ்தவப் புரிந்து கொள்ளுதல்களுக்கு ஏசாயா 53 ஒரு அஸ்திபாரமாக இருந்தது. எத்தியோப்பிய மந்திரி ஏசாயா 53ல் இருந்து வாசித்துக் கொண்டிருந்தபோது (நடபடிகள் 8:32, 33), அவருடன் இரதத்தில் ஏறியமர்ந்த பிலிப்பு, "இந்த வேதவாக்கியத்தை முன்னிட்டு இயேசுவைக்குறித்து அவனுக்குப் பிரசங்கித்தார்" (நடபடிகள் 8:35). இந்த வசனம் பற்றிக் குறிப்பிடுதல் தேவையற்ற அளவுக்கு இது, கிறிஸ்தவ மனச்சாட்சியின்/உணர்வில் ஒன்று கலந்திருந்தது என்பது சாத்தியமானதாக உள்ளது. புதிய ஏற்பாடு, கிறிஸ்தவ வாழ்விற்கு முன்மாதிரியாக இயேசுவை அறிவிப்பதோடு மட்டுமின்றி, அவரது வாழ்வு குற்றமற்றதாக, பாவமற்றதாக இருந்தது என்றும் அது உறுதிப்படுத்துகிறது (யோவான் 8:29; 2 கொரிந்தியர் 5:21; எபிரெயர் 4:15; 1 யோவான் 3:5). இயேசு பாவமில்லாதவராக இருந்ததால், தமது சீஷர்களிடம் அவர் பரிபூரணத்துவம் தவிரக் குறைவான எதையும் எதிர்பார்ப்பதில்லை (மத்தேயு 5:48). மிகச்சிறப்பான மக்களிடம் கூட இருக்கும் பூரணமற்ற தன்மையின் எதிரில், இயேசு "உங்களுக்காகப் பாடுபட்டார்" (2:21). புதிய ஏற்பாட்டில் "பாவம்" என்பது குறுநகை அல்லது புன்முறுவலுடன் பயன்படுத்தப்படக்கூடிய சொல்லாக இருப்பதில்லை. அது தேவனைக் கனவீனப்படுத்துகிறது மற்றும் பாவிக்குப் பேரழிவைக் கொண்டு வருகிறது.

ஏசாயா தீர்க்கதரிசனத்தில் இருந்து குறிப்பிட்ட வசனப்பகுதியானது, பேசும் விஷயங்களில் இயேசுவின் பாவமற்ற தன்மை பற்றிக் குறிப்பாகக்

கவனத்தை இழுக்கிறது. முன்னதாக அப்போஸ்தலர் தமது வாசகர்கள், சகல துர்க்குணத்தையும், கபடத்தையும் ஒழிக்க வேண்டும் என்று கூறியிருந்தார் (2:2). இப்போது அவர், இயேசுவின் பகுதியில் **அவரது வாயில் வஞ்சனை ஒன்றும் காணப்படவில்லை** என்று கூறினார். 2:2லும் இவ்விடத்திலும் ஒரே கிரேக்க வார்த்தையே "வஞ்சனை/வஞ்சகம்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ஏசாயா தீர்க்கதரிசனத்தில் இருந்து இவ்வார்த்தைகளை மாத்திரம் குறிப்பிட்டுக் காண்பித்ததால் பேதுரு, இருதயத்தின் குறிப்புணர்த்தும் விஷயமாகிய பேச்சை நோக்கிக் கவனத்தை ஈர்த்தார். யாக்கோபு, "நாம் எல்லாரும் அநேக விஷயங்களில் தவறுகிறோம்; ஒருவன் சொல்தவறாதவனானால் அவன் பூரணபுருஷனும், தன் சரீரமுழுவதையும் கடிவாளத்தினாலே அடக்கிக்கொள்ளக்கூடியவனுமாயிருக்கிறான்" என்று தைரியமாகக் கூறினார் (யாக்கோபு 3:2). இயேசு, "ஏனெனில், உன் வார்த்தைகளினாலே நீதிமான் என்ற தீர்க்கப்படுவாய்; அல்லது உன் வார்த்தைகளினாலே குற்றவாளி என்று தீர்க்கப்படுவாய்" என்று கூறியிருந்தார் (மத்தேயு 12:37).

**வசனம் 23.** மற்றும் **அவர் வையப்படும்போது பதில் வையவில்லை** என்று பேதுரு கூறத்தொடர்ந்தார். இவ்வார்த்தைகள் ஒரு நேரடியான குறிப்பாக இருப்பதில்லை, ஆனால் பேதுரு தமது சிந்தனைகளை ஏசாயா தீர்க்கதரிசனத்தில் இருந்து தரவழைக்கத் தொடர்ந்தார்: "அவர் நெருக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் இருந்தார், ஆனாலும் தம்முடைய வாயை அவர் திறக்கவில்லை" (ஏசாயா 53:7). தீர்க்கதரிசியின் இவ்வார்த்தைகள் இயேசுவின் குற்றமற்ற தன்மையை உறுதிப்படுத்துவது மட்டுமின்றி, இவைகள் அவரது மென்மைத் தன்மையும் அவரது விசுவாசத்தையும் பற்றியும் பேசுகின்றன. ஏசாயாவின் இவ்வார்த்தைகளுக்கு மறுவலிவூட்டுவதற்காகப் புதிய ஏற்பாடு சங்கீதம் 22 மற்றும் சங்கீதம் 69 ஆகியவற்றைத் தரவழைக்கிறது. கிறிஸ்து துன்புறும் மீட்பராக இருக்க வேண்டியிருந்தார் (காண்க சங்கீதம் 22க்கு மாற்கு 15:34 மற்றும் சங்கீதம் 69க்கு மாற்கு 15:23). சபித்தலுக்கு சபித்தலையும் வெறுப்புணர்வுக்கு வெறுப்புணர்வையும் ஒருவர் திரும்பத் தரும்போது, அவர் கிறிஸ்துவின் உதாரணத்தைக் கைவிட்டுத் தம்மைத்தாமே அழித்துக் கொள்கிறார். "வைதல்" என்பது வார்த்தைகளைத் தவறாகப் பயன்படுத்திச் சுழற்றுதலாக உள்ளது. இயேசுவின் விரோதிகள், சிலுவை மரணம் என்ற அவருக்கு நேர்ந்த கொடிய தண்டனையின்போது அவரை வைத விஷயத்தில் குறிப்பாக மிகவும் வலிவாக இருந்தனர். மத்தேயுவின் சுவிசேஷ விபரம் விரிவாக உள்ளது: "அப்பொழுது, அவருடைய முகத்தில் துப்பி, அவரைக் குட்டினார்கள். சிலர் அவரைக் கன்னத்தில் அறைந்து: கிறிஸ்துவே, உம்மை அடித்தவன் யார்? அதை ஞானதிருஷ்டியினால் எங்களுக்குச் சொல்லும் என்றார்கள்" (மத்தேயு 26:67, 68). பேதுரு தமது சொந்த நினைவில் இருந்து தரவழைத்தார். இயேசு சிலுவையில் அறையப்பட்டிருந்தபோது அவர் (பேதுரு) அருகில் நின்றிருந்தார். இயேசுவின் கரங்களுக்குள் ஆணிகள் அடித்துச் செருகப்பட்டதை அவர் கண்டிருந்தார் மற்றும் கர்த்தரிடம் பேசப்பட்ட ஏளன வார்த்தைகளை அவர் கேட்டிருந்தார். இயேசு தமது விரோதிகளைப் பதிலுக்கு எதிர்த்துப் பேசவில்லை என்று பேதுரு உறுதிப்படுத்திய விஷயமானது வதந்திக்கு மிகவும் அப்பாற்பட்டதாக இருந்தது.

இவ்வேளையில் பேதுரு, அடிமைகளுக்கான தமது குறிப்பிட்ட

புத்திமதிகளைப் பின்விட்டிருந்தார் என்பது தெளிவாக உள்ளது. இவ்வசனம், அப்போஸ்தலருடைய எல்லாக் கிறிஸ்தவ வாசகர்களுக்கும் உரைக்கிறது. அடிமைகள் தங்கள் எஜமான்களிடம் கீழ்ப்படிந்திருக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தலின் மூலம் அவர் தொடங்கினார். அடிமைகள் அநீதியாக நடத்தப்பட அதிக வாய்ப்பு உள்ளது என்பதைப் பற்றி அவர் அறியாது இருக்கவில்லை. இவ்விடத்தில் துன்புறுதல் என்ற பாடக்கருத்து அவரது அனுபவக் களத்தில் இருந்து எடுக்கப்பட்டிருந்தது. அடிமைகள் மாத்திரம் அல்ல, ஆனால் விசுவாசிகள் யாரும், தாங்கள் துன்புறும்போது, கர்த்தருடைய பாடுகளின் உதாரணத்தை கண்ணோக்க வேண்டியவர்களாக உள்ளனர். பதிலுக்குச் செய்தல் என்பது, நாகரீகமான மக்களின் மிகப்பழங்காலச் சட்டங்களில் ஒன்றாக இருந்தபோதிலும், அவர்கள் பதில் செய்யக் கூடாது இருந்தனர்.

மோசேயின் நியாயப்பிரமாணத்தில் பின்வருவது போன்று விளக்கப்பட்டுள்ள, பழிக்குப்பழி வாங்கும் பிரமாணமான, *lex talionis,* ல் ஒரு உள்ளான நீதி இருக்கிறது: "ஜீவனுக்கு ஜீவன், கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல், கைக்குக் கை, காலுக்குக் கால், சூட்டுக்குக் சூடு, காயத்துக்குக் காயம், தழும்புக்குத் தழும்பு பழி கொடுக்க வேண்டும்" (யாத்திராகமம் 21:23-25). அதையே நியாயப்பிரமாணம் கூறிற்று, ஆனால் இயேசு பதிலுக்குத் தாக்கவில்லை; அவரைப் பின்பற்றுபவர்களும் அதைச் செய்யக்கூடாது. ஒருவருக்கு பதிலுக்குத் தாக்கும் சக்தி இருக்கலாம் அல்லது இல்லாதிருக்கலாம். அது கணக்கிற்கு அப்பாற்பட்டது. குறிப்பாக, விசுவாசிகள் வாய்மொழித் தாக்குதலுக்குப் பதில் தாக்குதல் செய்யக்கூடாது. வாய்மொழித் தாக்குதலுக்குப் பதில் தரும் வாய்ப்பு இருக்கலாம், மற்றும் அதில் நியாயம் ஏதேனும் இருக்கலாம். எப்படி இருந்தாலும் கிறிஸ்தவர்கள் அதைச் செய்யக்கூடாது. அவர்கள் இயேசுவின் உதாரணத்தைப் பின்பற்றுகின்றனர். **அவர் பாடுபட்டபோது, பயமுறுத்தும் கூற்று எதையும் கூறவில்லை, ஆனால் நீதியாய் நியாயத்தீர்க்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்து** இருந்தார்.

பதில் வைவதற்குப் பதிலாக, நம்பிக்கை வைத்தலை இயேசுவின் உதாரணம் செயல்விளக்கப்படுத்திற்று. நீதிசெய்தலைக் கைவிட்டுவிடும்படி அப்போஸ்தலர் தமது வாசகர்களிடத்தில் கேட்கவில்லை. மாறாக நீதி செய்தலைத் தேவனிடத்தில் விட்டுவிடும்படி அவர் அறிவுறுத்தினார். அவரே நியாயாதிபதியாக இருக்கட்டும். அவர்கள், "நியாயமாய்த் தீர்ப்புச்செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தது" இருந்த இயேசுவைப் போல் இருக்க வேண்டும். சில அரசியல் வாதிகளுக்கு, ஆளுகை செய்தல் என்பது, "பைத்தியம் கொள்ள வேண்டாம், பதிலுக்குப் பதில் செய்து விடு" என்பதாக உள்ளது. இராஜாவான தாவீது "பதிவுக்குப் பதில் செய்துவிடும்படி" சோதிக்கப்பட்ட சில நிகழ்வுகளைத் தமது வாழ்வில் பெற்றிருந்தார். அவருக்கு முன்பாகத் தரையில் சவுல் (படுத்துக் கிடந்து) இருந்தபோது ஒரு ஈட்டியால் அவரைக் குத்தியிருந்தாலே அதுமாத்திரமே பதிலுக்குப் பதில் செய்தலுக்குப் போதுமானதாக இருந்திருக்கும், ஆனால் தாவீது, "கர்த்தர் அபிஷேகம்பண்ணின என் ஆண்டவன் மேல் என் கையைப்போடும்படியான இப்படிப்பட்ட காரியத்தை நான் செய்யாதபடிக்கு, கர்த்தர் என்னைக் காப்பாராக; அவர் கர்த்தரால் அபிஷேகம்பண்ணப்பட்டவர்" என்று கூறினார் (1 சாமுவேல் 24:6). தாவீது நியாயமாக நியாயந்தீர்க்கும்

கர்த்தர்மீது நம்பிக்கையாயிருந்தார். தேவன் நியாயமானவற்றைச் செய்வார் என்பது பேதுருவின் உறுதிப்பாடாக உள்ளது;அவர் "who judges righteously." யாக இருக்கிறார். குற்றம் அறியாதவர்களைப் புறங்கூறுபவர்கள், ஏழைகளுக்குத் தங்கள் முதுகைத் திருப்புகிறவர்கள், உதவியற்ற மக்களை அனுகூலப்படுத்திக் கொள்பவர்கள் ஆகியோர் ஒரு நியாயாதிபதியைக் கொண்டுள்ளனர். அவர் நீதியாய் நியாயந்தீர்ப்பார் என்று நம்பிக்கை வைத்தலே கிறிஸ்தவர்களின் பணிப்பகுதியாக உள்ளது. "ஏனென்றால், சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்படவேண்டும்" (2 கொரிந்தியர் 5:10).

**வசனம் 24.** அப்போஸ்தலரின் சிந்தனை, பின்பற்றுவதற்கு ஒரு உதாரணமாக இருக்கும் கிறிஸ்துவின் பாடுகளில் இருந்து, மனித மீட்பிற்காகப் பாவமற்ற அவர் பாடு அனுபவித்ததின் தனிச்சிறப்பிற்குக் கடந்து சென்றது. **சிலுவையின் மீது அவர், தாமே தமது சரீரத்தில் நமது பாவங்களைச் சுமந்தார்.** ஏசாயாவின் வார்த்தைகள் இந்தக் கருத்திற்கு மிகவும் நெருக்கமாக உள்ளன: "நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்" (ஏசாயா 53:5). பதிலாகச் செய்யப்பட்ட பரிகாரபலி என்பது கிறிஸ்தவ விசுவாசத்தில் மிகவும் நெஞ்சார நேசிக்கப்படும் போதனைகளில் ஒன்றாக உள்ளது. 3:18ல் இதைப் பேதுரு திரும்பவும் மேலே கொண்டு வந்தார். பாவங்களுக்குக் கிரயம் செலுத்துவதற்காகக் கிறிஸ்து [நமக்கு] பதிலாக பாடுபட்டார், மனிதகுலத்தின் பாவங்களை அவர் சுமந்தார்; ஆனால் பாவநிவாரணத்தின் இரகசியம் என்பது (நமக்கு) பதிலாக பாடுபடுதல் என்பதைவிட மிகவும் அதிகமானதாக உள்ளது. இயேசு தாமே முன்வந்து தம்மைத் தேவனுக்குக் கீழ்ப்படுத்தினார். தேவனுடைய நீதி, பாவங்கள் கணக்கிடப்படுதல் ஒன்றைக் கொண்டிருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறது. இயேசு பாவமின்றி வாழ்ந்து மரித்தபோது தேவனுடைய நீதி திருப்திப்படுத்தப் பட்டது எவ்வாறு என்பது மிகச்சரியாகத் தேவனால் அறியப்படுவதாக உள்ளது. தேவன் வெளிப்படுத்தி இருப்பவற்றை, அதாவது பாவம் என்பது மனிதகுலத்தின் உலகளாவிய நடைமுறையாக உள்ளது (ரோமர் 3:23) மற்றும் மன்னிக்கப்படாத பாவம் தேவனிடத்தில் இருந்து நித்தியத்திற்கும் பிரிக்கப்படுதலை விளைவிக்கிறது (ரோமர் 6:23) என்பதை நாம் உறுதிப்படுத்து கிறோம். தேவனால் தேர்ந்து கொள்ளப்பட்ட மக்களின் பாவத்தை **இயேசு காயங்களினால்** குணமாக்குகிறார்.

NASB வேதாகமம் *xulon* என்ற கிரேக்க வார்த்தையை "சிலுவை" என்று மொழிபெயர்த்தபோது, தனது வாசகர்களுக்கு ஒரு அநீதியை இழைத்துள்ளது. ஆங்கிலத்தில், மரங்கள் மற்றும் அதில் இருந்து செய்யப்படும் பொருள்கள் ஆகியவற்றிற்குப் பல வார்த்தைகள் உள்ளன. ஒவ்வொன்றும் தத்தமது நுண்பொருளைக் கொண்டுள்ளது. "wood," "tree," "board," "lumber," "plank," "forest," மற்றும் "timber" போன்ற வார்த்தைகள் ஒன்றுக்கொன்று தொடர்புடைய ஆனால் வேறுபட்ட அர்த்தங்களைக் கொண்டுள்ளன. ஆங்கிலத்தில் போன்றே கிரேக்க மொழியிலும் [மரம் என்பதற்கு] ஒன்று போன்ற அர்த்தமும் ஆனால் அதே வேளையில் மிகச் சரியாக ஒரே

அர்த்தமற்றதுமான பல வார்த்தைகள் உள்ளன. உயிருள்ள மரத்திற்கு *dendron*. என்பதே கிரேக்க வார்த்தையாகும் "சிலுவை" என்பதற்கு *stauros* என்பதே தக்க வார்த்தையாகும். கர்த்தர் சிலுவையில் அறையப்பட்ட நிகழ்வைக் கருப்பொருளாக உரைக்கும்போது புதிய ஏற்பாடு *stauros* என்ற வார்த்தையையே பொதுவாகப் பயன்படுத்துகிறது. இவ்விரு வார்த்தைகளில் எதையும் பேதுரு இவ்விடத்தில் தேர்ந்து கொள்ளவில்லை, இவ்வசனத்தில் "சிலுவை" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தை மிகச்சரியாக ''wood'' அல்லது ''tree.'' என்றே அர்த்தப்படுகிறது. இது சிலவேளைகளில், மரத்தில் இருந்து செய்யப்பட்ட தடிபோன்ற ஒன்றைக் குறிக்கிறது (மத்தேயு 26:47), ஆனால் இயேசு மரித்த சிலுவையானது புதிய ஏற்பாட்டில் ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் (xulon; நடபடிகள் 5:30; 10:39; 13:29). "மரம்" என்று அழைக்கப்பட்டுள்ளது.

பேதுரு வார்த்தைகளைத் தேர்ந்து கொண்டது தற்செயலானது என்பது மிகவும் அரிது. இந்தச் செயலினால் அவர் ஒரு முக்கியமான கூற்றை ஏற்படுத்தினார். இவ்வார்த்தை ஒரு தடி என்று அர்த்தப்படுவதாயிருக்கையில், இது மரக்கம்பு அல்லது கழுமரம் என்று அர்த்தப்படவும் கூடும். மோசேயின் நியாயப்பிரமாணத்தில், ஒரு மனிதன் குறிப்பிடத்தக்க வகையில் வெளிப்படையான பாவம் ஒன்றைச் செய்திருந்தபோது, அவனுக்குத் (மரத்தில் தூக்கப்படும்) தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டது. அவனது குற்றத்தின் பெருக்கத்தைப் பற்றிய கூற்று ஒன்றை எழுதுவதற்கு, கூர்மையாக்கப்பட்ட ஒரு மரமுளை அவனது உடலில் செருகப்பட வேண்டும், அவனது உடல் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட வேண்டும் (உபாகமம் 21:22, 23). இவ்வாறு வைக்கப்பட்ட மனிதன் சபிக்கப்பட்டவனாக இருந்தான். செருகப்பட்ட அந்த மரமுளை அவன் மரணத்திற்குக் காரணமாக இருக்கவில்லை என்று யோசுவா 10:26, 27 வசனங்கள் தெளிவுபடுத்துகின்றன; மரித்த மனிதன் தான் யாராக இருந்தான் என்பதற்காகவும் தான் செய்திருந்தவற்றிற்காகவும் சபிக்கப்பட்டான் என்று அறிவிப்பதற்காக அவன் மரத்திலே தூக்கப்பட்டான்.

உபாகமம் 21:22, 23ல் உள்ள நியாயப்பிரமாணம் மற்றும் சிலுவையில் இயேசுவின் மரணம் ஆகியவற்றிற்கு இடையில் ஒரு தொடர்பை வெளிப்படையாகப் பவுல் ஏற்படுத்தினார்: "மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன்" என்று எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப் பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக் கொண்டார்" (கலாத்தியர் 3:13). NASB வேதாகமம் 1 பேதுரு 2:24ல் "சிலுவை" ஒன்று மொழிபெயர்த்துள்ள அதே வார்த்தையை கலாத்தியர் 3:13ல் "மரம்" என்று மொழிபெயர்த்துள்ளது. "மரம்" என்ற வார்த்தையைப் பவுல் என்ன காரணத்திற்காகத் தேர்ந்தெடுத்தாரோ, அதே காரணத்திற்காகவே பேதுருவும் அவ்வார்த்தையைத் தேர்ந்தெடுத்தார். இயேசு சிலுவையில் தொங்கியபோது அவர், தேவனால் தள்ளப்பட்டு, புறக்கணிக்கப்பட்டு, சபிக்கப்பட்டதற்கு அது ஒரு நினைவூட்டுதலாக இருந்தது, தொடக்ககால கிறிஸ்தவர்கள் "மரம்" என்று அழைக்கப்பட்ட சிலுவை பற்றிக் கேள்விப்பட்டபோது, அது சிலுவையின் அர்த்தத்தை அவர்களுக்குத் தரும் ஒரு சித்திரத்தை அவர்கள் மனங்களில் தீட்டிற்று. பாவமில்லாதவரும் தேவனுடைய பிரிய குமாரனுமான

இயேசு, சிலுவையில் தொங்கியபோது, அவர் மனிதர்களின் பாவங்களுக்கு நியாயமானத் தகுதியான சாபத்தைச் சகித்திருந்தார். அவர் சாபமானார் என்பது, அவர்கள் பாவத்தில் இருந்து விடுதலையையும் வாழ்விற்காக (ஜீவனுக்காக) நம்பிக்கையையும் மகிழ்வுடன் அனுபவிக்க முடியும் என்று அர்த்தப்படுத்திற்று.

இந்த நிருபம் முழுவதிலும் பேதுரு, ஞானஸ்நான மொழிநடைக்கு வெகு அருகில் இருந்தார். இவ்வசனம் மற்றும் ரோமர் 6:2-4 வசனங்கள் ஆகியவற்றில் உள்ள வார்த்தைகளுக்கு இடையிலான ஒற்றுமை குறிப்பிடத் தக்கதாக உள்ளது. பவுல், "பாவத்துக்கு மரித்த நாம் இனி அதிலே எப்படிப் பிழைப்போம்?" என்று கேட்டார் (ரோமர் 6:2); **நாம் பாவங்களுக்குச் செத்து** என்று பேதுரு எழுதினார். "நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு" என்பது கிறிஸ்தவ ஞானஸ்நானத்தின் விளைவாக உள்ளது என்று பவுல் அறிவித்தார் (ரோமர் 6:4); பேதுரு, "நாம் ... **நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு**" என்று எழுதினார். விசுவாசி ஒருவர் ஞானஸ்நானத்தில் கிறிஸ்துவுடன் கூட அடக்கம் பண்ணப்படும்போது, அவர் [விசுவாசி] பாவத்திற்கு மரிக்கிறார். ரோமர் 6:2-4 மற்றும் 1 பேதுருவின் இவ்வசனப்பகுதி ஆகியவற்றிற்கு இடையில் பொதுவாக இணைகருத்துக்களை விளக்கவுரைகள் காணுகின்றன; அவற்றின் கலந்துரையாடலானது எவ்வளவு அடிக்கடி ஞானஸ்நானம் பற்றிய குறிப்பு எதையும் கொண்டிருப்பதில்லை என்பது திகைப்புக்கு உரியதாக உள்ளது. 1 பேதுருவில் "நாம் ... செத்து" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தை, *apoginomai*, என்ற வினைச் சொல்லின் ஒருமுறை மாத்திரம் வரும் எச்சவினையாக உள்ளது, இது பவுல் பயன்படுத்திய வார்த்தையைக் காட்டிலும் பலவீனமான வார்த்தையாக உள்ளது. புதிய ஏற்பாடு முழுவதிலும் இவ்வார்த்தை இந்த ஒரு இடத்தில் மாத்திரமே "விட்டு ஒழித்தல்" அல்லது "அதனுடன் இனி ஒன்றும் செய்யாதிருத்தல்" என்ற கருத்தைத் தெரிவிக்கிறது. "நாம் பாவத்தைப் பின்னே தள்ளிவிட்டு, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு" என்ற மொழிபெயர்ப்பு பேதுருவின் வார்த்தைகளுக்கு நியாயம் செய்கிறது. ஞானஸ்நான மொழிநடை தெளிவாக உள்ளது. இயேசுவைக் கர்த்தர் என்று தழுவிக்கொள்ளுதலில் உள்ள ஒழுக்கரீதியான மற்றும் நெறிமுறை சார்ந்த அளவைகளைப் பேதுரு தமது வாசகர்களுக்கு முன்பாக வைப்பதில் ஒருக்காலும் தவறியதில்லை. அவர்கள் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்றபோது, அவர்கள் பாவத்தைத் தங்களுக்குப் பின்னால் போட்டு விட்டனர். கிறிஸ்துவுக்குள்ளான வாழ்வு நீதியை வற்புறுத்திக் கேட்கிறது.

**வசனம் 25.** 2:21-25 முழுவதிலும், ஏசாயா 53ம் அதிகாரம் பின்னணியில் ஒருக்காலும் தொலைவில் இருக்கவில்லை. ஆயினும் 2:24ன் கடைசி வார்த்தைகளான "அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்" என்பவற்றிலும் இவ்வசனத்தின் (25ம் வசனத்தின்) முதல் வார்த்தைகளிலும் ஏசாயா தெளிவாகப் பேசுகிறார்: "அவருடைய தழும்புகளால் குணமாகிறோம். நாமெல்லாரும் ஆடுகளைப்போல வழிதப்பித் திரிந்து, அவனவன் தன் தன் வழியிலே போனோம்; கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார்" (ஏசாயா 53:5, 6). **சிதறுண்ட ஆடுகளைப் போலிருந்தீர்கள்** என்பது பவுலினால் ஏற்படுத்தப்பட்ட அதே உபதேச

உறுதிப்பாட்டின் அளவை எட்டுகிறது. அவர் "எல்லாரும் பாவஞ்செய்து தேவமகிமையற்றவர்களாகி," என்று எழுதினார் (ரோமர் 3:23). "சிதறுண்ட" என்ற மொழிபெயர்ப்பு கிரேக்க எச்சவினையின் நிகழ்கால வினைச்சொல்லைப் பற்றிப்பிடிக்கிறது.[18] மனிதர்களின் பாவங்களை இயேசு சுமந்தார். மனிதர்கள் தங்கள் பகுதியில் எப்போதுமே தேவனை விட்டுப் பிரிந்து சென்று, கலகத்தி லும் பாவத்திலும் இழந்து போகப்பட்டிருந்தனர்.

அப்போஸ்தலர், **இப்பொழுதோ ... திருப்பப்பட்டிருக்கிறீர்கள்** என்று கூறியபோது, அவர் தமது வாசகர்களை, அவர்களின் மனமாற்றத்தின் காலத்தை நினைவுகூறும்படி அழைத்தார். **"திருப்பப்பட்டிருக்கிறீர்கள்"** (*epistrephō*) என்ற வார்த்தை, பல ஆண்டுகளுக்கு முன்பு, கர்த்தர் பரத்துக்கேறின பின்பு வந்த வாரங்களில் எருசலேமில், பேதுரு பயன்படுத்தியிருந்த அதே வார்த்தையாக உள்ளது. மக்கள் கூட்டம் சாலொமோன் மண்டபம் என்னப்பட்ட மண்டபத்திலே கூடியபோது, அவர்களுக்குப் பிரசங்கித்த பேதுரு, அவர்களை "உங்கள் பாவங்கள் நிவிர்த்திசெய்யப்படும்பொருட்டு நீங்கள் மனந்திரும்பிக்குணப்படுங்கள்" என்று வேண்டிக் கேட்டுக் கொண்டார் (நடபடிகள் 3:20). நடபடிகள் 3:20ல் "மனந்திரும்பி" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள அதே வார்த்தையே இவ்வசனத்தில் **"திருப்பப்பட்டிருக்கிறீர்கள்"** என்று மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. கிறிஸ்தவர்கள் விசுவாசத்தில் பலவீனம ாகி தங்களின் இலக்கினுடைய உணர்வை இழக்கும் வேளையில், அவர்கள் தங்களின் ஞானஸ்நானத்தில் கர்த்தரை அணிந்துகொண்டபோது, தங்கள் இருதயங்களை நிரப்பியிருந்த அன்பு மற்றும் நன்றியுணர்வு ஆகியவற்றைச் சிந்தித்துப் பார்த்தல் அவர்களுக்கு உதவிகரமாக உள்ளது. நம்பிக்கை இழந்து ஊசலாடிக்கொண்டிருந்த எபிரெயக் கிறிஸ்தவர்களுக்கு எழுதியபோது, அந்த [எபிரெயருக்கு எழுதிய] நிருபத்தின் ஆசிரியர், "முந்தின நாட்களை நினைத்துக்கொள்ளுங்கள்; நீங்கள் பிரகாசமாக்கப்பட்டிருந்த அந்த நாட்களில் உபத்திரவங்களாகிய மிகுந்த போராட்டத்தைச் சகித்தீர்களே" என்று கூறினார் (எபிரெயர் 10:32). பேதுருவின் வாசகர்களும்கூட கிறிஸ்துவைத் தழுவிக்கொண்ட காரணத்தினால், "பாடுகளின் மாபெரும் போராட்டத்தை" சகித்திருந்தனர். நீங்கள் "சிதறுண்ட ஆடுகளைப்போலிருந்தீர்கள் ... இப்பொழுதோ ... திருப்பப்பட்டிருக்கிறீர்கள்" என்று அப்போஸ்தலர் எழுதினார்.

ஆடுகள் பற்றிய உவமை உருவகம் வேதாகமத்தின் பக்கங்களில் விடாது ஆழமாக ஓடுகிறது. ஆடுகள் எளிதில் வசப்படுத்தப் படக்கூடியவையாகவும் உதவியற்றவையாகவும் இருக்கச் சாய்கின்றன, அவர்களுக்கு வழிகாட்டுதலும் பாதுகாப்பும் அளிக்கக் கூடியவர் தேவை. ஆடுகளைப் போன்று மக்கள், விபத்துக்கள், வியாதி மற்றும் மரணம் ஆகியவற்றின் முன்னிலையில் தங்கள் உதவியற்ற தன்மையை உணரச் சாய்கின்றனர். சிலவேளைகளில் அவர்கள், நயமற்ற முரட்டுத்தனம் மற்றும் சுயநிறைவு ஆகியவற்றினால் சந்தோஷப்பட்டாலும், சிந்தனையானது தாழ்மை மற்றும் கீழ்ப்படிதல் ஆகியவற்றிற்கு அவர்களை வழிநடத்துகிறது. பேதுரு இந்த நிருபத்தை எழுதி ய, புறஜாதிப் பின்னணி கொண்ட கிறிஸ்தவர்கள், இஸ்ரவேல் நாட்டில் பொதுவாக இருந்த ஆடுமேய்த்தல் பற்றிய அதே சொந்த அனுபவத்தைக் கொண்டிருக்க அனேகமாக வாய்ப்பில்லை, ஆனாலும் புறஜாதியில் இருந்து

*மனம்மாறியவர்கள் தொடக்கத்தில் இருந்தே இஸ்ரவேல் மக்களின் இந்த மொழிநடையைக் கற்று இருந்தனர். பழைய ஏற்பாடு ஒரு கிறிஸ்தவப் புத்தகமாக இருந்தது. இங்கு கூறப்பட்ட உவமானம் பேதுருவின் வாசகர்களிடத்தில் ஒழிந்துபோகாது நிலைத்திருக்கும். "சிதறுண்ட ஆடுகளைப்போலிருந்தீர்கள் ... இப்பொழுதோ ... திருப்பப்பட்டிருக்கிறீர்கள்."*

*பிற்பாடு பேதுரு, சபையின் மூப்பர்களை "மேய்ப்பர்கள்" என்றும் "கண்காணிகள்" என்றும் அழைக்கவிருந்தார் (5:1-3). வார்த்தை அமைப்பில் உள்ள தொடர்ச்சியானது கிரேக்க மொழியில் உள்ளது போன்று அவ்வளவு தெளிவாக ஆங்கில மொழியில் இல்லை. 5:2ல் "மேய்த்து" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தை மேய்ப்பர் (poimēn) என்ற வார்த்தையின் வினைச்சொல் வடிவமாகும், அது இவ்விடத்தில் (2:25ல்) இயேசுவுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது. 5:3ல் உள்ள "கண்காணிப்புச் செய்யுங்கள்" என்று மொழிபெயர்க்கப்பட்ட வார்த்தை, இவ்வசனத்தில் உள்ள* ***"கண்காணியுமானவரிடத்தில்"*** *(episkopos) என்ற வார்த்தையின் வினைச்சொல் வடிவமாக உள்ளது. "பாதுகாப்பாளர்" என்ற சொற்றொடர் "மூப்பர்" மற்றும் "கண்காணி" என்றும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. சபைகளில் மூப்பர்கள் சில வழிவகைகளில், உலகளாவிய சபையின்மீது இயேசு தலைவராக இருப்பதற்கு ஒப்பான வகையில் பணியாற்றுகின்றனர். கிறிஸ்தவர்கள் துன்புறும்போது அவர்கள், தங்களைக் கண்காணித்து வழிகாண்பிப்பவர் இருக்கும் நிச்சயத்தில் தைரியத்தைக் கண்டடைகின்றனர், அவர்கள் தங்கள் "மேய்ப்பரும் கண்காணியுமானவர்" தங்களை முற்றிலும் வழிநடத்துவார் என்று தைரியமாயிருக்கின்றனர். அவர்களின் துன்பமானது "பிரதான மேய்ப்பரான" கிறிஸ்து வெளிப்பட இருக்கும் நாளைத் துரிதப்படுத்துகிறது (4:17-19; 5:4).*

## நடைமுறைப் பயன்பாடு

### கீழ்ப்படிதல் கொண்டிருங்கள்; தேவபக்தியுடன் வாழுங்கள் (2:13-15)

*பின்வருவனவற்றுள், நமக்கு அதிகம் இடர்பாட்டைத் தரும் கருத்து என்ன என்று அறிதல் கடினமாக உள்ளது: கீழ்ப்படிதலா அல்லது அதிகாரமா. முதல் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த யூத வரலாற்றாளரான யோசிப்பஸ் அவர்கள், தமது காலத்தின்போது மிகவிரைவில் அடுத்த ரோமப் பேரரசராகவிருந்த வெஸ்பாசியன் என்பவரைப் பற்றி, அதிகாரத்தில் இருத்தல் மற்றும் அதிகாரத்தின் கீழ் இருத்தல் ஆகிய இரண்டையும் அறிந்திருக்க மனிதர் என்று விவரித்தார்.[19] வழிகாட்டுதல் கொடுத்தல் மற்றும் வழிகாட்டுதல் பெறுதல், அதிகாரத்தில் இருத்தல் மற்றும் அதிகாரத்தின் கீழ் இருத்தல் ஆகிய இரண்டும் வாழ்வில் பெரும் விஷயங்களைச் செய்பவையாக உள்ளன.*

*கீழ்ப்படிதல் என்பது கிறிஸ்தவ வாழ்விற்கு அத்தியாவசியமான ஒரு உட்கூறு என்பதைப் பேதுரு நிருபத்தின் வாசகர்கள் அறிய வேண்டும் என்று பேதுரு விரும்பினார். சபைக்குள்ளாகக் கிறிஸ்தவர்கள் முதலில் கிறிஸ்துவுக்கும், பின்பு தேவனுடைய மக்களைக் கண்காணிப்புச் செய்கிற மூப்பர்களுக்கும் தங்கள் கீழ்ப்படிதலைக் காண்பிக்க வேண்டும். சமூகத்தில் அவர்கள் தங்கள் நாட்டின்*

சட்டங்களுக்குக் கீழ்ப்படிய வேண்டும், அந்த சட்டத்தில் சில விஷயங்கள் இருக்க வேண்டிய பிரகாரம் இது என்று ஒருவர் விரும்புகிறபடி இல்லையென்றாலும்கூட அது குறிப்பிடும் விஷயங்களை அவர்கள் செய்தாக வேண்டும். வீடும் பணியிடமும் நன்கு இயங்க வேண்டும் என்றால், பொறுப்பின் பணிச்செயல் இருக்க வேண்டும். எந்த ஒரு குழுவும் நன்கு பணிசெய்வதற்கு, மக்களுக்குத் தலைமைத்துவம் தேவைப்படுகிறது. தலைமைத்துவம் செயல்விளைவு கொண்டிருப்பதற்கு, கீழ்ப்படிதல் இருக்க வேண்டும். கீழ்ப்படிதல் என்பது அதிகாரத்தின் முன்னிலையில் அச்சத்துடன் ஒடுங்குதலைக் கேட்பது இல்லை. அது முறைமை மற்றும் வளர்ச்சி ஆகியவற்றின் நிமித்தம் ஒருவர் தமது சொந்த முன்னுரிமைகளைக் கைவிடும்படி தாழ்மையுடன் இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறது.

## இயேசுவுக்கான தனிப்பட்ட உரிமை கோருதல் (2:24, 25)

மனித வரலாற்றில் முற்றிலும் தனிச்சிறந்த நிகழ்வு ஒன்று இல்லாதபட்சத்தில் மனித குலத்திற்கு உலகளாவிய செய்தி எதுவும் இருக்க இயலாது. கிறிஸ்தவ அறிக்கையிடுதலானது, இயேசுவானவர் எல்லாப் போதகர்களைக் காட்டிலும் மிகவும் ஞானமிக்கவராக இருந்தார் என்ற உறுதிப்பாட்டைக் காட்டிலும் அதிகமானதாக உள்ளது. அவர் தேவனுடைய குமாரனாக இருந்தார் என்பது உரிமை கோருதலாக இருக்கிறது. அவர் ஒருவரால் மாத்திரமே நமது பாவங்களுக்கு மரிக்க முடிந்தது (2:24, 25). அவர் ஒருவர் மாத்திரமே தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருந்து ஆளுகை செய்யும்படிக்கு மரித்தோரில் இருந்து உயிர்த்தெழுந்தார். அவர் மாத்திரமே மறுபடியும் வரவிருக்கிறார். உலகத்தின் மற்ற மார்க்கங்களில் கிறிஸ்தவ செய்திக்கு ஒப்பாகப் பேசப்படக்கூடியது ஒன்றுமில்லை, கிறிஸ்தவம் என்பது மார்க்கரீதியான சாத்தியக்கூறுகளின் மத்தியில் தேர்ந்துகொள்ளப்படக் கூடிய ஒரு விஷயமாக இருப்பதில்லை. இரட்சிக்கப்படுவதற்கு அவரது நாமமே அல்லாமல் வேறே நாமம் இல்லை (நடபடிகள் 4:12; காண்க யோவான் 14:6). "... கிறிஸ்துவின் தனித்தன்மையை மறுதலித்தல் என்பது, ஊழியத்தின் நரம்பை வெட்டி அதை மேலாக இருத்தலாக்குதல் என்பதாக உள்ளது. இதற்கு மறுபுறத்தில், அவரது தனித்தன்மையை உறுதிப்படுத்துதல் என்பது, அவரை உலகளாவிய வகையில் அறியச் செய்வதற்கான அவசரத்தன்மையை ஒப்புக்கொள்வதாக உள்ளது."[20]

---

**குறிப்புகள்**

[1]I. N. Carman, "Here We Are but Straying Pilgrims," *Songs of the Church,* comp. and ed. Alton H. Howard (West Monroe, La.: Howard Publishing Co., 1977). [2]Charles H. H. Scobie, *The Ways of Our God*: *An Approach to Biblical Theology* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 2003), 506. [3]உதாரணத்திற்கு, "நான் சிலிசியா நாட்டிலுள்ள கீர்த்திபெற்ற தர்சுபட்டணத்து யூதன்" என்று பவுல் எழுதினார் (நடபடிகள் 21:39). [4]J. Ramsey Michaels, *1 Peter,* Word Biblical Commentary, vol. 49 (Waco, Tex.: Word Books, 1988), 114. [5]"சந்திப்பு" (*episkope*) என்று வார்த்தை, "கண்காணி" அல்லது "மேய்ப்பர்" (*episkopos*) என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தையின் அதே வேரில் இருந்தே வருகிறது. 1 தீமோத்தேயு 3:1ல் *episkope* என்பது கண்காணியின் அலுவலைக் குறிக்கிறது

மற்றும் நடபடிகள் 1:20ல் இது அப்போஸ்தலரின் அலுவலைக் குறிக்கிறது. [6]கி.மு. 509ல் ரோமர்கள் தங்கள் கடைசி அரசரான பெருமைமிகுந்த டார்க்குயின் என்பவரைப் பதவிநீக்கம் செய்தனர். அந்த நிகழ்வினுடன் ரோமக்குடியரசு பிறந்தது. உயர்மரபு ரோமர்கள், அரசர்கள் எப்போதாவது தங்களை ஆளலாம் என்ற சிந்தனையை வெறுத்து ஒதுக்கினர். புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலத்தில், ரோமாபுரியானது குடியரசு இன்னமும் இருந்தது என்ற பொய்க்கதையில்தான் வாழ்ந்தது.கோட்பாட்டளவில் பேரரசர் வெறுமனே "முதல் குடிமகனாக" மாத்திரமே இருந்தார். உண்மையிலோ, பேரரசரே படையைக் கட்டுப்படுத்தினார் எனவே அதிகாரமும் அவர் கையில் தான் இருந்தது. [7]ஐந்து மாகாணங்களில் பெயர்களும் 1:1ல் பட்டியலிடப்பட்டுள்ளன. (அறிமுகப் பகுதியில் காணவும்.) [8]NASB வேதாகமம் ஆண்பால் பெயர் உரிச்சொல்லான *pantas* என்பதை பால் உள்ளடங்கிய சொற்றொடரான "எல்லா மக்களையும்" என்பதைக் கொண்டு மொழிபெயர்த்துள்ளது என்பது ஆர்வத்திற்குரிய விஷயமாகும். இந்தப் பெயர் உரிச்சொல் நேரடி அர்த்தத்தில் "எல்லா மனிதர்களையும் (அதாவது ஆண்களையும்)" என்றே அர்த்தப்படுகிறது, இவ்வாறே KJV வேதாகமத்திலும் உள்ளது. NRSV மற்றும் NIV வேதாகமங்கள், வார்த்தைகள் மற்றும் சொற்றொடர்களின் மிகப்பரந்த வரைவெல்லையும் பால்ரீதியான மொழியை நடைமுறைப்படுத்த முயற்சி செய்துள்ளன. "சகோதரர்" என்பதற்கான கிரேக்க வார்த்தை "சகோதரர்கள் மற்றும் சகோதரிகள்" என்று மொழிபெயர்க்கப்படும், "மனிதர்கள் [ஆண்கள்]" என்பதற்கான வார்த்தை "மக்கள்" என்று மொழிபெயர்க்கப்படும், முதலியன. NASB வேதாகமத்தின் "all people" என்பது, அப்படிப்பட்ட பழைமைவாத மொழிபெயர்ப்பும்கூட, இரு பால்களுக்கும் கிரேக்கு மற்றும் எபிரெய மொழிகள் ஆண் பால் சொல்லையே பயன்படுத்தின என்பது பற்றிச் சிந்தையின்றிப் போய்விடவில்லை என்பதை விவரிக்கிறது. ஆங்கில மொழியிலும் இதே செய்யப்பட்டுள்ளது என்று ஒருவர் விவாதிக்கலாம். கடந்த காலத்தில் ஆங்கிலத்தில் "he" என்பது சந்தர்ப்பப் பொருளைச் சார்ந்து, "he" அல்லது "she" என்று அர்த்தப்படுத்தியுள்ளது, மற்றும் "மனிதர்கள் [ஆண்கள்]" என்பது "மக்கள் [பொதுப்பால்]" என்று அர்த்தப்படுத்தியுள்ளது. கிரேக்கு மொழியின் ஆண் குறிப்புச் சொல்லை இருபாலையும் உள்ளடக்கும் சொல்லாக மொழிபெயர்ப்பது எப்போதாவது ஏற்புடையதாக இருக்கிறதா என்பது இங்கு கேள்வியல்ல. இந்த சந்தர்ப்பத்தில் NASB வேதாகமம் கூட அது அவ்வாறே உள்ளது என்றே விவாதிக்கிறது. மேற்கத்தியக் கலாச்சாரத்தின் அரசியல்ரீதியாக கட்டளையிடப்பட்டுள்ள பால் சமநிலையின் வற்புறுத்தலை இடங்கொள்ளச் செய்வதற்கு, சொல்விளக்கத்தின் பழைய வடிவங்களை ஏற்றுக்கொள்வதில் மொழிபெயர்ப்பாளர்கள் எவ்வளவு தூரம் போகக்கூடும் என்பதே இங்கு கேள்வியாக உள்ளது. [9]"அறிக்கையிடுதல்" என்பதினால் நாம் வெறும் வாய்மொழிக்கூற்று என்பதைக் காட்டிலும் அதிகமானவற்றை அர்த்தப்படுத்துகிறோம். அறிக்கையிடுதல் மறைமுகமாக உரைக்கும், விசுவாசம், அன்பு, புதிய பிறப்பு, கீழ்ப்படிதல் முதலிய யாவற்றையும் நாம் அர்த்தப்படுத்துகிறோம். [10] Scobie, 847.

[11]பேதுரு 2:13ல் செய்தது போன்று ("கீழ்ப்படியுங்கள்" என்று) கட்டளையிடாமல், இவ்விடத்தில் ("கீழ்ப்படிந்திருங்கள்") என்ற எச்சவினையை நுட்பமாகப் பயன்படுத்தி இருந்த போதிலும், சந்தர்ப்பப் பொருளானது அர்த்தத்தில் வேறுபாடு எதையும் கருத்தாகத் தெரிவிப்பதில்லை. பேதுரு எச்சவினையை கட்டளையின் வலிவுடன் பயன்படுத்தியது கல்வியாளர்கள் மத்தியில் அதிகமான கலந்துரையாடலின் பொருளாயிற்று. [12]Michaels, 138 ஐக் காணவும். [13]உதாரணத்திற்குப் பின்வரும்

*புத்தகத்தில் காணவும்:* Wayne A. Grudem, *The First Epistle of Peter: An Introduction and Commentary,* Tyndale New Testament Commentaries, vol. 17 (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1988), 124. [14]*நல்ல பதிவேட்டுப் படிப்பு ஒன்றிற்கு, பின்வரும் புத்தகத்தில் காணவும்:* Richard A. Horsley, "The Slave Systems of Classical Antiquity and Their Reluctant Recognition by Modern Scholars," *Semeia* 83/84 (1998): 19–66. [15]*"பாவங்களுண்டென்று உணர்த்தும் மனச்சாட்சி" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள எபிரெயர் 10:2ம் வசனம் ஒரு இணைச்சொற்றொடராக உள்ளது. காண்க* Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature,* 3d ed., rev. and ed. Frederick William Danker (Chicago: University of Chicago Press, 2000), 967. [16]J. N. D. Kelly, *A Commentary on the Epistles of Peter and of Jude,* Black's New Testament Commentaries (London: Adam & Charles Black, 1969), 117. [17]Ignatius *Ephesians* 10.3. [18]"Planet" *என்ற ஆங்கில வார்த்தை கிரேக்க வினைச்சொல்லான planao, என்பதன் இனச்சொல்லாகும், இது "அலைதல்" என்று அர்த்தப்படுகிறது. நிலையாக இருக்கும் விண்மீன்கள் மத்தியில் கிரகங்கள் அலைந்து திரிந்தன என்று பழங்கால மக்கள் உற்றுக்கவனித்தனர் (யூதா 13ம் வசனத்திற்கான விளக்கங்களைக் காணவும்). அவர்கள் அடிக்கடி இந்த கிரகங்களைப் பல்வேறு தெய்வங்களுடன் இணைவுபடுத்தினர்.* [19] Josephus *Wars* 4.10.2. [20] John Stott, *The Contemporary Christian* (Leicester, U.K.: Inter-Varsity Press, 1992), 316.